விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பதின்னான்கு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 ஆவணி 25 வியாழக்கிழமை (10.09.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 265




## வவுனியா நலன்புரி முகாமில் இருந்த 6 ஆயிரத்து 838 பேர் நாளை யாழ். அழைத்து வரப்படுவர்

(யாழ்ப்பாணம்)

வவுனியா நலன்புரி முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 6 ஆயிரத்து 838 பேர் நாளை வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்திற்கு அழைத்து வரப்பட்டு மீள்குடியமர்த்தப்படுவர் என யாழ். அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார்.

இதுதொடர்பில்யாழ். அரசஅதிபர்க.கணேஷ் தெரிவித்தாவது;

வவுனியா நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 6 ஆயிரத்து (14ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் திஸ்ஸ விதாரண இன்று யாழ். வருகை

(யாழ்ப்பாணம்)

விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண மற்றும் அமைச்சின் செயலாளர் உட்பட உயர்மட்ட அதிகாரிகள் அடங்கிய குழுவினர் இன்று யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளனர்.

இன்று காலை 9.00 மணிக்கு மாவட்டச் செயலகத்தில் இடம்பெறவுள்ள மாநாட்டைத் தொடர்ந்து நல்லூர், யாழ்ப்பாணம், கோப்பாய், சண்டிலிப்பாய், சங்கானை,தெல்லிப்பழை, (14ஆம் பக்கம் பார்க்க)

# யுனிசெப் அதிகாரியை வெளியேற்றுவதில் இலங்கை அரசு கடும்பிடி

# ஐ.நா. செயலாளர் கடுப்பு

## விரைவில் ஜனாதிபதியுடன் பேசவும் முடிவு

(ஜெனீவா)

ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியப் பேச்சாளர் ஜேம்ஸ் எல்டரை வெளியேற்றும் இலங்கை அரசின் உத்தரவு குறித்து ஐக்கிய நாடுகள் சபை கண்டனம் வெளியிட்டுள்ளது. செயலர்ளர் பான் கீ மூன் இந்த கண்டனத்தை வெளியிட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (14ஆம் பக்கம் பார்க்க)

## வவு. நலன்புரி முகாம்களில் உள்ள 16 ஆயிரத்து 569 பேரின் விபரம் உறுதி செய்து அனுப்பி வைப்பு

(யாழ்ப்பாணம்)

வவுனியா நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 5 ஆயிரத்து 558 குடும்பங்களைச் சேர்ந்த 16 ஆயிரத்து 569 பேரின் விபரங்கள் யாழ். மாவட்ட செயலகத்தால் உறுதிப்படுத்தப்பட்டு வடபிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு அனுப்பி (14ஆம் பக்கம் பார்க்க)

## 12,13ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த நடமாடும் சேவை பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் நெறிப்படுத்தலில் நாளை மறுதினம் சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக் கிழமையும் யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவிருந்த பொதுமக் களுக்கான நடமாடும் சேவை தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப் பட்டுள்ளதாக யாழ்.அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார்.

இது தொடர்பில் யாழ். அரச அதிபர் க.கணேஷ் தகவல் தருகையில்;

ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தில் ஜனா திபதி செயலக அனுசரணையுடன் பொது நிர்வாக அலுவல்கள் அமைச்சின் நெறிப் படுத்தலின் கீழ் நாளை மறுதினம் 12 ஆம் திகதியும் மறு நாள் 13ஆம் திகதியும் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் பொதுமக் களுக்கான நடமாடும் சேவை நடைபெற விருந்தது.

எனினும் தவிர்க்கமுடியாத காரணத்தினால் இந் நடமாடும் சேவை பிற்போடப் பட்டுள்ளதாக பொது நிர்வாக உள் நாட்டலுவல்கள் அமைச்சு நேற்று அறிவித் துள்ளது.

எனவே இந் நடமாடும் சேவை நடைபெறும் வேறொரு திகதி விரைவில் அறிவிக்கப்படும் எனத் தெரிவித்தார். (ந-5)

## வடக்கு மாகாண சபை நிர்வாகத்தில் செயலாளர்களுக்கு விரைவில் மாற்றம்!

(திருகோணமலை)

வடக்கு மாகாணசபை நிர்வாகத்தில் மூன்று செயலாளர்கள் விரைவில் மாற்றப்படவுள்ளதாக வடக்கு மாகாணசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்கமைவாக வடக்கு மாகாணஆளுநரின் செயலாளராகவுள்ள திருமதி ஆர்.விஜயலட்சுமி வடக்குமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளராக நியமிக்கப்படவுள்ளார்.

அத்துடன் வடக்குமாகாண முன்னாள் பிரதம செயலாளராகவிருந்து ஓய்வு பெற்ற எஸ்.ரங்கராஜா ஆளுநரின் செயலாளராக நியமிக்கப்படவுள்ளார்.

இதேவேளை வடக்குமாகாண உள்ளூராட்சி (14ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்–வவுனியா சேவையில் இன்றுமுதல் 4 தினங்களுக்கு 25 பஸ்கள் ஈடுபடும்

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய போக்குவரத்து சபையின் யாழ்ப்பாணத்திற்கும் வவுனியாவுக் குமிடையில் ஏ-9 வீதியூடான சேவையில் இன்று முதல் 4 நாட்களுக்கு 10 பஸ்கள் மேலதிகமாக ஈடுபடுத்தப்படுமென அதன் உதவிப் பொதுமுகாமையாளர் எஸ்.கணேசபிள்ளை தெரிவித்தார்.

வவுனியா நலன்புரி முகாமிலிருந்து நாளை விடுவிக்கப்படவுள்ள மக்களை அழைத்து வருவதற்காகவே யாழ்ப்பாணத்திலிருந்து 10 (14ஆம் பக்கம் பார்க்க)

## முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மக்களை உடனடியாக மீளக்குடியமர்த்த வேண்டும்

## தென்பகுதி அமைப்புக்கள் முதற்தடவையாக பேரணி

(கொழும்பு)

இடம்பெயர்ந்து வவுனியா நலன்புரி முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மக்களை உடனடியாக மீள் குடியமர்த்துமாறு கோரியும் மற்றும் தோட்டத் தொழிலாளர்க ளுக்கு 500 ரூபாய் சம்பள உயர்வு வழங்குமாறு வலியுறுத்தியும் கொழும்பில் நேற்று நண்பகல் ஆர்ப்பாட்டம் ஒன்று இடம் பெற்றது.

இடதுசாரி முன்னணி, ஐக்கிய சோசலிச கட்சி,தொழிற்சங்கங்கள் ஊடக அமைப்புகள், மனித உரிமை அமைப்புகள் மற்றும் கத்தோலிக்க திருச்சபையின் அருட்தந்தையர்கள் ஆகியோரும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

கொழும்பு கோட்டை ரயில் நிலையம் முன்பாக சுமார் ஒரு மணி நேரம் நடைபெற்ற இந்த ஆர்ப்பார்ட்டத்தில் நூற்றுக் க்ணக்கான மக்கள் கலந்து (14ஆம் பக்கம் பார்க்க)

## அவசரகாலச்சட்டத்தை எதிர்த்து ஜே.வி.பி., கட்சி வாக்களிக்கும்

(கொழும்பு)

அவசரகால நிலையை எதிர்த்து வாக்களிப் பது என ஜே.வி.பி. கட்சி தீர்மானித்துள்ளது.

ஊடகங்களை ஒடுக்குவதற்கும், தொழிற்சங்கங்கள் மற்றும் எதிர்த்தரப் பினரை ஒடுக்குவதற்கு அரசு அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தி வருவதை அடுத்து அதனை எதிர்ப்பது என கட்சி தீர்மானித்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் கே.எல்.லால் காந்த தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நாளை வெள்ளிக் கிழமை அவசரகாலச் சட்டம் வாக்களிப்புக்கு விடப்படும் போது அதனை எதிர்த்து ஜே.வி.பி. வாக்களிக்கும்.

பயங்கரவாதத்தை தோற்கடிக்கும் தேவைக் காகவே, அவசரகாலச் சட்டத்தை அரசு நிறைவேற்றுவதற்கு (14ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். பல்கலைக் கழகத்தில் திஸ்ஸ விதாரணவின் கருத்துரை

(யாழ்ப்பாணம்)

இன்று யாழ்ப்பாணம் வருகைதரும் அமைச்சர் திஸ்ஸ விதாரண யாழ். பல்கலைக் கழகத்திற்குக்கு விஜயம் செய்யவுள்ளார்.

பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் இன்று மாலை 5.30 மணியளவில் இடம்பெறவுள்ள கருத்தரங்கில் இலங்கை இனப்பிரச்சனையும் அதற்கான அரசியல் தீர்வும் என்ற கருப் பொருளில் அவர் கருத்துரை வழங்கவுள்ளார். (ந-7)







## "அருள் ஒளி" ஆவணி மாத இதழ் வெளிவந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத்தால் மாதம் தோறும் வெளியிடப்படும் அருள் ஒளி ஆன்மீக சஞ்சிகையின் ஆவணி மாத இதழ் திருமஞ்சம் வெள்ளோட்டவிழா சிறப்பு மலராக தேவஸ்தான முகப்பு தோற்றம்,திருமஞ்சமாதிரிப்படம் ஆகியவற்றை அட்டைப்படமாக தாங்கி வெளிவந்துள்ளது.

இம்மலரில் தேரின் தத்துவம், திருமஞ்சத்தின் மகிமை போன்ற பல கட்டுரைகளும் மற்றும் புதிதாக அமைக்கப்பட்ட அழகிய திருமஞ்சத்தின் படம் திருமஞ்ச வெள்ளோட்ட விழாக் காட்சிகளின் படங்கள் போன்றன உள்ளடங்கியுள்ளது. (ஓ-9)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

பி.சி.ஏச்.எஸ். (BCHS) நிறுவனத்தினால் நடத்தப்படும் சர்வதேச பட்டப்படிப்பு தொடர்பான இலவச கருத்தரங்கு எதிர்வரும் 12 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கு கொழும்பிலிருந்து வருகை தரும் துறைசார் வல்லுனர்களினால் நடத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ-4-17)

## பாரதியார் விழா

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் மறுமலர்ச்சி மன்றத்தினால் நடத்தப்படும் பாரதியார் விழா நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நவாலி ஸ்தான அமெரிக்கன் மிஷன் தமிழ் கலைவன் பாடசாலையில் மன்றத்தலைவர் தெ. கனகசபாபதி, செந்தினி தர்மசீலன் ஆகியோர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பாரதியார் வாழ்க்கை என்னும் விடயம் பற்றி சிறப்பு பேச்சும், மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளது. (ஓ-4)

## மூலிகைக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

வலி வடக்கு பிரதேச செயலக ஆயுள்வேத பாதுகாப்புச் சபையினால் நடத்தப்படும் மூலிகை சுகவாழ்வுக் கருத்தரங்கு நாளை மறுநாள் சனிக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் அலுவலக மண்டபத்தில் டாக்டர் வை. வரதலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் ஆயுள்வேதப் பாதுகாப்புச் சபை பிரதி செயலாளர் சின்னத்தம்பி சுப்பையா 'மூலிகைகளும் சுகவாழ்வும்' எனும் தலைப்பிலும் டாக்டர் வெற்றிவேல் சக்திவேல் "புற்றுநோய் சிகிச்சையில் எதிர் ஒட்சியேற்றி மூலிகைகளும் அதன் இரசாயன ஆய்வுகளும்" எனும் தலைப்பிலும் சிறப்புரை நிகழ்த்துவர்.

அத்துடன் கருத்தாடல் நிகழ்வும் மூலிகைகள் காட்சிப் படுத்தலும் இடம்பெறவுள்ளது. மருத்துவர்கள், ஆர்வலர்கள் அனைவரும் பங்குபற்றி பயனடையுமாறு வலி வடக்கு ஆயுள்வேத பாதுகாப்பு சபை செயலாளர் டாக்டர் வெ. சக்திவேல் கேட்டுக் கொள்கின்றார். (ஓ-17)

# நடமாடும் சேவையில் பயன்பெற உரியவர்கள் தொடர்பு கொள்ளவும்

## காரை. உ.அ.அதிபர் அறிவிப்பு

(காரைநகர்)

வாகன சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்வதற்கு விண்ணப்பித்த வாகன சாரதிகள் உரிய ஆவணங்களுடன் வருகை தருமாறு காரைநகர் உதவி அரச அதிபர் இ.த. ஜெயசீலன் கேட்டுக் கொண்டுள்ளார்.

யாழ். மாவட்டத்தில் நடைபெறவுள்ள நடமாடும் சேவையின் ஓர் அங்கமாக இவ் அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படவுள்ளன.

காரைநகர் உதவி அரச அதிபர் பணிமனையில் 2008 ஆம் ஆண்டும் அதற்கு முன்னரும் மோட்டார் வாகன உடமை மாற்றம் மற்றும் வாகன சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியனவற்றைப் பெறுவதற்கு விண்ணப்பித்திருந்தும் இதுவரை அவை கிடைக்கப் பெறாதவர்கள் உரிய ஆவணங்களுடன் உடனடியாக காரைநகர் உதவி அரச அதிபர் பணிமனையுடன் தொடர்பு கொள்ளுமாறும் இவர்களிற்கான அனுமதிப்பத்திரம் நடமாடும் சேவையினூடாக மிக விரைவில் வழங்குவதற்கு இலகுவாக இருக்கும் எனவும் உதவி அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

மேலும் புதிய தேசிய அடையாள அட்டை, சேதமடைந்த அடையாள அட்டை மற்றும் பெயர் மாற்றம் போன்றவற்றிற்காக அப்பகுதித் திணைக்களத்திற்கு விண்ணப்பிக்கவுள்ளோர் உரிய ஆவணங்களுடன் தமது பிரிவு கிராம சேவையாளரூடாக உதவி அரச அதிபர் பணிமனையுடன் தொடர்பு கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார். (ந-246)

## க.பொ.த (உ/த) கணித, விஞ்ஞான பாட ஆசிரியர்களுக்கான செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

மாகாண கல்வித் திணைக்களம் தேசிய கல்வி நிறுவகத்துடனும், யாழ். பல்கலைக் கழகத்துடனும் இணைந்து க.பொ.த. (உ/த) கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வினை யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் 25 ஆம் திகதி தொடக்கம் 30 ஆம் திகதி வரை நடத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.

மேற்குறித்த திகதிகளில் இணைந்த கணிதம், இரசாயனவியல் பாடங்களிற்கான செயலமர்வு வேம்படி மகளிர் கல்லூரியிலும், மற்றும் பௌதீகவியல், உயிரியல் பாடங்களிற்கான செயலமர்வு யாழ். மத்திய கல்லூரியிலும் காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை பாடரீதியாக தனித்தனியாக நடைபெறவுள்ளது.

இச் செயலமர்விற்கு வலய ரீதியாக க.பொ.த. (உ/த) இல் கணிதம், விஞ்ஞானம் கற்பிக்கும் ஆசிரியர்களை புதிய பாடத்திட்ட கைநூலுடன் கலந்து கொள்ளுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுக் கொள்கின்றார். (ஓ-9)




## வீதிகள் புனரமைப்பு

(வடமராட்சி)

வடமராட்சியில் வடக்கின் வசந்தம் திட்டத்தில் உள்ளூராட்சி திணைக்களத்தின் கீழ் 20 வீதிகள் புனரமைக்கப்படவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகளை உள்ளூராட்சி திணைக்களம் மேற்கொண்டுள்ளது. இதனடிப்படையில் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் 4 வீதிகளும், பருத்தித் துறை நகரசபையின் 9 வீதிகளும், பருத்தித்துறை பிரதேச சபையின் 3 வீதிகளும், வல்வெட்டித்துறை நகரசபையின் 4 வீதிகளும் புனரமைக்கப்படவுள்ளன.

மேலும் யாழ். மாவட்டத்தில் மொத்தமாக 68 வீதிகள் புனரமைக்கப்படவுள்ளதாகவும் இதற்கான மூலப் பொருட்களை பெற்றுக் கொள்வதில் தற்போது நெருக்கடி நிலவுவதாகவும் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ஓ-4-10)

## மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான மாணவ ஒன்றியத்தினால் நடத்தப்பட்டு வரும் விளையாட்டு விஞ்ஞான அலகின் மெய்வல்லுநர் போட்டியில் இன்று வியாழக்கிழமை காலை 6 மணிமுதல் 7.30 மணி வரை ஆண்களுக்கான 5 ஆயிரம் மீற்றர் ஓட்டம், ஆண் பெண் இருபாலாருக்குமான ஈட்டி எறிதல் மற்றும் 800 மீற்றர் ஓட்டம் ஆகியன இடம்பெறவுள்ளன. இதில் முதலாம், 2 ஆம் வருட மாணவர்கள் பங்குபற்றவுள் ளனர்.

அத்துடன் மாலை 2 மணிக்கு பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டியும் மற்றும் ஆண்களுக்கான கூடைப்பந்தாட்ட போட்டியும் இடம்பெறவுள்ளது.

இதில் முதலாம் வருட மாணவர்களை எதிர்த்து 2 ஆம் வருட மாணவர்கள் மோதவுள்ளனர். (ஓ-9)

## கிருஷ்ண ஜெயந்தி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்கு அருள்மிகு ஸ்ரீ வல்லிபுரநாதர் தேவஸ்தானத்தில் ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி உற்சவம் நாளை வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிமுதல் 108 கலச சங்காபிஷேகமும் விசேட தீபாராதனையும் சகஸ்ர நாம அர்ச்சனையும் இடம்பெறவுள்ளது.

அன்றிரவு நித்திரை விழிப்புடன் நள்ளிரவு 12 மணிக்கு ஜனனபூசை, தாலாட்டு, காலைப் பிரசாதம் வழங்கல் என்பன இடம்பெறும்.

மறுநாள் சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு உறியடி உற்சவமும் இடம்பெறவுள்ளது. (ஓ-36)

## புதிய யோகாசன வகுப்புகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

சிவலிங்க யோக கேந்திரா நிலையத்தினால் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 7.30 மணி தொடக்கம் புதிய யோகாசன வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இப்பயிற்சி நெறி ஆண்கள், பெண்கள், நோயாளர்கள் எனத் தனித்தனியாக 3 மாத காலப் பயிற்சி நடைபெறவுள்ளது.

இதில் கலந்து கொள்ள விரும்புவோர் நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-4)

## தேசிய மட்டப் போட்டிக்கு செல்லும் விளையாட்டு வீரர்களுக்கு

(யாழ்ப்பாணம்)


யாழ். மாவட்டத்திலிருந்து கரப்பந்தாட்டம், கொக்கி, கிறிக்கெற், கபடி, எல்லே, கூடைப் பந்தாட்டம், கரம், மேசைப்பந்து, வலைப்பந்தாட்டம் ஆகிய விளையாட்டுக்களில் வெற்றி பெற்று 2 ஆம் கட்டமாக தேசிய மட்டத்திற்கு தெரிவாகியுள்ள வீராங்கனைகள் இன்று வியாழக்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ். புகையிரத நிலையத்திற்கு சமூகமளிக்குமாறு யாழ். மாவட்ட விளையாட்டு குழுச் செயலாளர் மூ. நடராஜா தெரிவித்துள்ளார். (ஓ-4)

## "ஞானச்சுடர்" வெளிவந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு செல்வச் சந்நிதியான் ஆலய சூழலில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவையால் மாதந்தோறும் வெளியிடப்படும் ஞானச்சுடர் மலரின் ஆவணிமாத மலர் வெளிவந்துள்ளது.

இம்மலர் கு. சிவபாலராஜாவின் தொண்டைமானாறு தொடக்கம் மாணிக்கங்கை வரை எனும் வரலாற்று கட்டுரை, மூ. சிவலிங்கத்தின் முக்திக்கு வித்தாகும் பக்தி நெறி என்னும் கட்டுரை, செல்வி. ச. ஐடாவின் மங்கலப் பொருட்களின் வரிசையில் வீபூதியின் மகத்துவம் ஆகிய கட்டுரைகளை உள்ளடக்கியதாக வெளிவந்துள்ளது. (ஓ-4)




ஈ சொப்ற் கணனி நிறுவனத்தின் க.பொ.த. உயர்தர பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான கருத்தரங்கு நேற்று யாழ்ப்பாண வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிராந்திய பணிப்பாளர் எம். சயிலேந்திரா கருத்துரை வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட ஒரு தொகுதியினரையும் படங்களில் காணலாம்.

# NORTH LANKA IIT

Main Street, Chankanai. / #113, Laxan Plaza, Navalar Road,Jaffna.
Phone:- 0217390110 , 0602214305 Web:- www.northlankaiit.com
www.nliit.com

Partner Institution of

## Isles Internationale Université EU/Commonwealth & Nottingham College of London



**North Lanka IIT** ஆனது யாழ்ப்பாணத்திலே இயங்குகின்ற கணினி உயர் கல்வி நிறுவனங்களில் பட்டப்படிப்புக்களை முதன்மைப்படுத்தி இயங்கும் ஒரு முன்னணி நிறுவனமாகும். இது பிரதான வீதி, சங்கானையிலும், இல.113, லக்சன் பிளாசா, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிகளில் இயங்கிவருகின்றது. இது **Isles International University** மற்றும் **Nottingham College of London** என்பவற்றினது **Partnet Institution** ஆகும். இது மட்டுமல்லாது மானிப்பாய், அச்சுவேலி, அளவெட்டி இல் உள்ள எமது **Partner Institution** மூலமாகவும் **Diploma** கற்கை நெறிகளையும் நடாத்தி வருகின்றோம்.
இங்கே முக்கியமாக இரண்டு பட்டப்படிப்பிற்கான கற்கைநெறிகள் நடைபெறுகின்றன.

**1.B.Sc. in Computer Science.**
**2.B.Sc. in Multimedia-1st Year.**










The Signing Agreement on Collaboration between Isles Internationale Universite (European Union) the Executive President Prof H Sandhu and North Lanka IIT (Sri Lanka) Rector Mr. S.A Balasubramaniam

## B. Sc. in Computer Science

B.Sc. in Computer Science கற்கைநெறி HND OR A/L OR O/L தகமைகளுடன் 1-3 வருடங்களில் எமது நிறுவனத்திலே பயின்று தமது Degree Certificateயை இங்கேயே பெற்றுக்கொள்ள முடியும்.இக்கற்கை நெறியின்போது Diploma, Graduate Diploma, Degree ஆகிய 3 வகை சான்றிதழ்களைப் ஒரே தடவையில் பெற்றுக்கொள்ள முடியும். மேற்படி Diploma ஆனது 2ம் Semester ஐ பூர்த்தி செய்த பின் Cambridge Association of Managers – UK இனால் வழங்கப்படும். இது UK Quality Assurance Commission இனால் Validate செய்யப்பட்டதும் Cambridge Acadamy of Management இனால் Endorse செய்யப்பட்டதுமாகும். இதே தரமுடைய Graduate Diploma சான்றிதழ் 4ம் Semester முடிவில் வழங்கப்படும். இவ்வாறான வசதியானது மாணவர்கள் பாடசாலை மட்டத்திலிருந்தே பட்டதாரியாகும் சூழலை ஏற்படுத்துகின்றது. ஒரு மாணவன் பாடசாலை மட்டத்தில் Diploma, Advanced Diploma சான்றிதழ்களைப் பெற்று, பின்பு Degree சான்றிதழைப் பெறமுடியும். 6ம் Semester முடிவில் Isles International University (Commonwealth) இனால் இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினது (UGC) அங்கீகாரமுடைய Degree Certificate ஐப் பெற்றுக் கொள்ள முடியும். மேற்படி Isles Internationale Universite இனது அங்கீகாரங்களில் சில.....

1. Received accreditation granted from the Académie Européenne d'Informatisation; established in Brussels, Belgium, by Order of the King of Belgium Albert II
2. Professional Recognition from Indian Management Academy (INDIA)
3. Academic Recognition from Eastern Asia University Thailand
4. Professional Recognition United Kingdom
5. Ministry of Justice – Belgium
6. European Commission Education and Training – European Union
7. Ministry of Education in the United Kingdom
8. Business Intelligence Service of London, UK
9. International Academy of Science (IAS) - Germany
10. SPARC Europe – European Union
11. DOAJ - Sweden



இப்பல்கலைக்கழகமானது North Lanka IIT இனை தமது Partner Institution ஆக அங்கீகரித்து இதற்கான ஒப்பந்தத்தினை மலேசியா சர்வதேச அலுவலகத்தில் கையொப்பமிடப்பட்டுள்ளது. எதிர்வரும் நவம்பர் 27ல் Cambodia வில் நடைபெறும் IIU இனது இவ்வருடத்திற்கான 7வது பட்டமளிப்பு விழாவில் எமது நிறுவனம் ஊடாக பட்டப்படிப்பைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான பட்டமளிப்பும், North Lanka IIT இனை IIU - இனது வலையப்பின்னலில் இணைப்பதற்கான விருதும் Cambodia ஜனாதிபதியினால் வழங்கப்படவுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. இப்பட்டப்படிப்பைத் தொடர்ந்து M.Sc. in Computer Science கற்கைநெறியை பயிலக்கூடிய வசதியும் North Lanka IIT இலேயே உருவாக்கப்பட்டுள்ளது அல்லது உயர்கல்வியை வெளிநாடுகளில் தொடரக்கூடிய ஒழுங்குகளும் செய்து தரப்படும். இக்கற்கை நெறியில் ஆசிரியர்கள், தனியார் துறையில் (கணினி துறைசார்) வேலை செய்பவர்கள், மற்றும் BIT பூர்த்தி செய்யாதவர்கள், HND தகமை உடையவர்களுக்கும் கற்கை நெறிக்கான காலம் நெகிழ்ச்சியுடையது.





## B. Sc. in Multimedia - 1st Year

B.Sc. in Multimedia ஆனது Multimedia துறையில் ஒருவருட பட்டப்படிப்பை எமது நிறுவனத்திலும், 2ம், 3ம் வருட பட்டப்படிப்பினை வெளிநாடு ஒன்றிலும் தொடர முடியும். இக்கற்கை நெறியானது Nottingham College of London உடன் இணைந்து நடாத்தப்படுகிறது. O/L தகமை போதுமானது. 1st Semester முடிவில் Diploma in Multimedia - Semester 1, 2nd Semester முடிவில் Diploma in Multimedia –Semester11 சான்றிதழ்கள் Nottingham College of London இனால் வழங்கப்படும். மூன்று வருடங்களையும் வெளிநாடுகளிலேயே கற்க முடியும். இருப்பினும் 1ம் வருடத்தில் பகுதி நேர வேலை வாய்ப்பை ஒழுங்கு செய்துதருவது சாத்தியமற்றது. இது 2ம் வருடத்திலேயே சாத்தியமாகும். பகுதி நேர வேலைவாய்ப்பின் மூலம் மாதம் ஒன்றிற்கு $1500(USD) யை பெறக்கூடியதானது. அத்துடன் 1ம் வருடம் வெளிநாட்டில் தேவைப்படும் செலவில் 1/20 பங்கு செலவு எமது நிறுவனத்தில் கற்பதற்கு போதுமானது. முக்கியமாக 2ம், 3ம் வருட பட்டப்படிப்பினை Netherlands, Italy, Malta நாடுகளின் பல்கலைக் கழகங்களில் தொடர்வது வரவேற்கத்தக்கது. பட்டப்படிப்பைப் பூர்த்தி செய்த பின்பு நிரந்தர வதிவிட உரிமையை (PR) பெறக்கூடிய வசதியிருப்பதாலும், Sponsor தேவையில்லை என்பதாலும், IELTS தேவையில்லை என்பதாலும், மேற்படி நாடுகளுக்கு பகுதி நேர வேலைவாய்ப்பு உறுதிப்படுத்தப்படுவதாலும், மேற்படி நாடுகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. Italy நாட்டிற்கு தவணைமுறைக்கட்டணமும் அனுமதிக்கப்படுவதனால் மாணவர்கள் தமது உழைப்பிலே மிகுதிப் பணத்தை செலுத்த முடியும். UK, Canada போன்ற நாடுகளுக்கும் அந் நாட்டு நடைமுறைகளுக்கு அமைவாக Student Visa பெற்றுத்தரப்படும். இக்கற்கை நெறிக்கான நேரடி அனுமதிகள் Nottingam College of London Director இனால் கடந்த 4ம், 5ம் திகதிகளில் North Lanka IIT யாழ் நிறுவனத்திலும், 6ம் திகதி யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலத்திலும் வழங்கப்பட்டது. இதன்போது ஏற்கனவே 1st Semester பூர்த்திசெய்த மாணவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.










# அவசரகாலச் சட்டத்தை இல்லாதொழிப்பது குறித்து 366 தொழிற்சங்கங்கள் பேச்சு வார்த்தை

(கொழும்பு)

அவசர காலச் சட்டத்திற்கு ஆதரவு வழங்கப்படக் கூடாதென ஜே.வி.பி எதிர்க் கட்சிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளது. அரசாங்கம் அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தி ஊடகவியலாளர்கள், மாணவர்கள் மற்றும் தொழிலாளர்களை கட்டுப்படுத்த முயற்சிப்பதாக ஜே.வி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் கே.டி.லால் காந்த தெரிவித்துள்ளார்.

எனவே அவசரகாலச் சட்டத்திற்கு சகல எதிர்க் கட்சிகளும் எதிர்ப்பு தெரிவிக்க வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவசர காலச் சட்டத்தை இல்லாதொழிப்பது குறித்து 366 தொழிற்சங்கங்கள் பேச்சு வார்த்தைகளை ஆரம்பித்துள்ளதாகஅவர் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத்தை தடுப்பதற்காக அமுல்படுத்தப்பட்டிருந்த அவசரகாலச் சட்டத்தை அரசாங்கம் தனது சொந்த தேவைகளுக்காக பயன்படுத்தி வருவதாகவும் அவசர காலச் சட்டத்திற்கு ஆதரவளிப்பது குறித்து ஜே.வி.பி.யின் அரசியல் பீடம் இறுதித் தீர்மானமொன்றை எடுக்க உள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஓ-6)

# லங்கா பத்திரிகையின் ஊடகவியலாளர்கள் பிணையில் விடுதலை

(கொழும்பு)

தெனியாய பகுதியில் கைது செய்யப்பட்ட லங்கா செய்திப் பத்திரிகையின் மூன்று ஊடகவியலாளர்களும், நேற்று முன்தினம் மெறவாக்க நீதவான் நீதிமன்றத்தில், ஆஜர் செய்யப்பட்ட பின்னர், பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் அத்துமீறி பிரவேசித்த குற்றச்சாட்டின் பேரில் தெனியாய பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

குறித்த மூன்று ஊடகவியலாளர்களும் 30 ஆயிரம் ரூபா வீதம் காசுப் பிணையிலும், 50 ஆயிரம் ரூபா வீதம் சரீரப் பிணையிலும் விடுதலை செய்யப்பட்டனர்.

இந்த மூன்று ஊடகவியலாளர்களையும், நவம்பர் 4 ஆம் திகதி மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு மெறவக்க நீதிவான் உத்தேஷ் ரணதுங்க குறித்த சந்தேக நபர்களுக்கு உத்தரவிட்டார்.

லங்கா செய்திப் பத்திரிகையின், இந்த மூன்று ஊடகவியலாளர்களும் கடந்த இரண்டாம் திகதி கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஓ-3)

# தடுப்பு காவல் கைதிகள் காணாமல் போனவர்கள் தொடர்பில் கொழும்பில் அடுத்தவாரம் மாநாடு

## மனோ கணேசன் எம்.பி.தகவல்

(கொழும்பு)

போர் ஓய்வுக்கு வந்துவிட்ட நிலையில் நீண்டகாலமாக தடுப்பு காவலிலே வைக்கப்பட்டுள்ள கைதிகள் மற்றும் கடந்த மூன்று வருடங்களிலே கடத்தப்பட்டு காணாமல் போனவர்கள் ஆகிய இரண்டு பிரிவினர் தொடர்பில் உரிய தீர்வுகளை காண வேண்டிய வேளை வந்துள்ளது.

இந்த இரண்டு தரப்பினரின் பிரச்சினைகள் சம்பந்தமாக எதிர்வரும் செப்டெம்பர் 16 ஆம் திகதி புதன்கிழமை காணாமல் போனவர்கள் மற்றும் தடுப்பு காவல் கைதிகள் ஆகியோரது குடும்பத்தவர்களை அழைத்து கொழும்பிலே ஒரு மாநாட்டை நடத்துவதற்கு மக்கள் கண்காணிப்புக்குழு தீர்மானித்துள்ளதாக குழுவின் தலைவர் சிறிதுங்க ஜயசூரியவும், ஏற்பாட்டாளர் மனோ கணேசனும் தெரிவித்துள்ளார்.



இது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் மனோகணேசன் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கடந்த 25 ஆண்டுகளாக நடைபெற்று வந்த போர் முடிபுக்கு வந்துவிட்டதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. இந்நிலையில் வன்முறை நடவடிக்கையில் ஈடுபட்ட பல்லாயிரக் கணக்கான போராளிகள் கைது செய்யப்பட்டு அவர்களுக்கு புனருத்தாபன பயிற்சி வழங்கப்படுகின்றது.

அதே போல் வடக்கில் சுமார் மூன்று இலட்சம் தமிழ் மக்கள் அகதி முகாம்களில் தடுத்து வைக்கப்பட்ட நிலையில் அவர்களது மீள் குடியேற்றம் இன்று முதன்மை பிரச்சினையாக கருதப்படுகின்றது.

இந்நிலையில் இதே காரணங்களுக்காக கைது செய்யப்பட்டு அல்லது கடத்தப்பட்ட நிலையில் தடுப்பு காவலில் வைக்கப்பட்டிருக்கும் கைதிகளினதும், காணாமல் போனவர்களினதும் பிரச்சினைகளை நமது சமூகம் மறந்து விட முடியாது.

வெளியிலே வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களின் பிரச்சினைகளுக்கு வழங்கப்படும் அதே முக்கியத்துவம் கைதிகளுக்கும் காணாமல் போனவர்களுக்கும் வழங்கப்பட வேண்டும். (ஓ-6)

# ஜனாதிபதியின் ஆலோசகர்கள் 22 பேருக்கு ரூபா ஒருகோடி சம்பளம்

## அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தகவல்

(கொழும்பு)

ஜனாதிபதியின் 22 ஆலோசகர்களுக்கு ஒரு கோடி ரூபா சம்பளம் வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் ஆலோசகர்களாக மொத்தம் 38 பேர் கடமையாற்றி வருவதாக தெரிவித்துள்ள அவர் இவர்களில் 16 பேர் சம்பளம் எதனையும் பெற்றுக் கொள்ளாது கௌரவ சேவை ஆற்றி வருவதாகவும் ஏனையோருக்கு 60 ஆயிரம், 40 ஆயிரம், 30 ஆயிரம் ரூபா என கொடுப்பனவுகள் வழங்கப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

அத்துடன் வாகனங்களோ அல்லது விமானங்களோ ஜனாதிபதி ஆலோசகர்களினால் துஷ்பிரயோகம் செய்யப்படவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் ரணவீர பத்திரனவினால் முன்வைக்கப்பட்ட குற்றச் சாட்டுக்களுக்கு பதிலளிக்கும் வகையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (ஓ-6)

# உலக மக்களைக் கவர்ந்த ஒபாமா

## அடிமைச்சந்தையிலிருந்து வெள்ளை மாளிகை வரை

124



இரு துருவங்களாக செனட்டர்கள் தொடர்ந்தனர். ஒரு பக்கம் மற்றைய பக்கத்தை மிகக் கொடுமையான வார்த்தைகளாலடித்தனர். அவர்கள் ஒருவருக்கொருவர் வேற்றுமைப்பட்டனர். வேற்றுமைப்பட வாய்ப்பு, அதன் இயல்பு காரணங்கள் என்ற அடிப்படையில் மேலும் வேறுபட்டு நின்றனர்.

கால நிலை மாற்றத்தின் காரணம் பற்றி மாறுபட்டனர். காலநிலை மாற்றம் உண்டு என்றும் இல்லையென்றும் வாதிட்டனர். துண்டு விழும் தொகையா அல்லது அதற்குக் காரணம் யார் என்று சண்டை போட்டனர்.

இந்தச் சூழல் ஒபாமாவுக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கவில்லை. அவர் சிறு வயதிலிருந்து இவற்றை நன்கு அவதானித்து வந்துள்ளார். சடைமாருதமாக வீசிய அரசியல் புயல்களைக் கண்டுள்ளார்.

பிரசாரக் கலாசாரம் அரசியல் வானில் வசைபாடும் தொழிலாக மாற்றமடைந்து இலாபகரமாக ரி.வி, றேடியோ என்று பரவிப் பரந்து அதிக விலைபோகும் நியூயோர்க் ரைம்ஸ் வெளியீடுகளாகப் பரிணமித்தது.

ஒபாமா இலினோயிஸ் மாநில செனட்டராக இருந்த காலங்களில் குடியரசுக் கட்சியினர் பெரும் பான்மையினராக மாநிலத்தை ஆண்டனர். ஜனநாயக் கட்சியினர் சபை யில் நலிந்த சிறுபான்மையினராக இருந்து கொண்டு மசோதாக்களில் சிறு மாற்றம் கூட கொண்டு வர முடியாத பரிதாபத்துக்குள்ளானார்கள். அவர்களால் கூச்சல் போட்டுக் குளறி கோபங் கொண்டு குற்றம் சாட்ட மாத்திரம் தான் முடிந்தது.

அவற்றையும் தாண்டி குடியரசுக் கட்சியினர் தாங்கள் நினைத்த சட்டங்களை இயற்றித் தள்ளினர். மிகப் பெரிய கம்பனி வரிச் சலுகைகளை வெளியிட்டனர். அதனை தொழிலாளிகளின் வருவாயைக் குறைப்பதன் மூலம் ஈடு செய்தனர். அல்லது சமூக சேவைகளைக் குறைத்துச் சரிக்கட்டினர்.

காலப்போக்கில் ஜனநாயகக் கட்சித் தலைமைப்பீடம் ஒரு குழுவாக கோபவேசப்பட்டனர். ஒபாமாவின் சகபாடிகள் ஜனநாயகக் கட்சியினர் குடியரசிடமிருந்து பெற்ற அவமானங்கள், சொல்லடிகள் எல்லாவற்றையும் கவனமாக பதிவு செய்து வைத்தனர்.

2003 இல் அதாவது ஆறு வருடங்களின் பின் ஜனநாயகக் கட்சியினர் தேர்தலில் வெற்றி பெற்று பெரும்பான்மை ஆட்சி அமைத்த போது எதிர்க்கட்சியினரை அவர்கள் மரியாதையோடு நடத்தவில்லை.

குடியரசுக் கட்சியினர் ஜனநாயகக் கட்சியினர் என்ற பாகுபாடுகள் இல்லாத ஒரு காலம் இருந்தது. அதையிட்டு கவலையோடு இரைமீட்பர். இப்போதும் செனட்டர்களாக இருக்கின்ற பழைய அனுபவசாலிகள் கூட காலத்தின் கோலத்திற்கேற்ப தங்களை மாற்றிக் கொண்டனர்.

எதிர்க்கட்சியினர் தங்களை இலக்கு வைத்து சட்ட விரோதச் செயல்கள் ஊழல்கள், திறமையின்மை, ஒழுக்கச் சீர்கேடுகள் முதலிய குற்றங்களை சுமத்தும் போது அவர்களால் வாழாதிருக்க முடியவில்லை. அதே ஆயுதங்களை எதிராளி மேல் எறியத்தான் செய்தனர்.

இவற்றையெல்லாம் கண்டு வாழாவிருந்த பேர்வழியல்ல ஒபாமா. அரசியல் என்றால் முழுத் தொடர்பாடல் விளையாட்டு என்பது அவருடைய கருத்து. ஆகவே புறந்தள்ளப்படுவதையோ அல்லது அடிக்கடி நிகழும் ஒளித்திருந்து கொடுக்கப்படும் அடியையே அவர் கவனத்தில் கொள்ளவில்லை.

ஆயினும் அவர் பிரதிநிதிப்படுத்திய மாவட்டம் பாதுகாப்பானதாகையால் குடியரசுக் கட்சியினரின் சொல்லடிகள் அவர் மீது விழவில்லை.

சிலவேளைகளில் குடியரசுக் கட்சி செனட்டர் நண்பர்களுடன் பீர் குடிப்பதையோ, சீட்டாடுவதையோ மேற்கொள்வார். அப்போது அவர்களுடன் பேச்சுக் கொடுப்பார். அவற்றிலிருந்து அவர் படித்த பாடம் மகத்தானது.

வெளியே மறுத்தாலும் இரு கட்சியினருக்குமிடையில் பலவிடயங்களில் பொறுமை காணப்படுவதை ஏற்றுக் கொண்டனர். இதன் காரணமாகத்தான் ஒபாமா தான் எட்டாண்டுகள் இலினோயிஸ் செனட்டர் ஆக இருந்த காலப் பகுதியில் ஒரு விடயத்தை இறுகப் பிடித்திருந்தார். அதாவது அரசியல் வேறு, வாக்காளர்கள் விரும்புவது வேறு என்பதாகும்.

வாக்காளர்கள் தங்கள் பிரச்சினைகளை தீர்வு படுத்துவது, வசைபாடுவது, விளம்பரத்துக்காக மட்டும் தீர்வு கண்டு தகவல் தொடர்பு சாதனங்களுக்கு கொடுப்பது ஆகியவற்றைக் கண்டு களைப்படைந்தனர். பெருமூச்சு விட்டனர்.

ஆகவே தான் ஒபாமா வாக்காளர்களை நேரடியாகத் தொடர்பு கொண்டு பிரச்சினைகளைத் தான் விளங்கியவாறே வடிவமைத்து தனக்குத் தெரிந்தபடி தெரிவுகளை உண்மையாக வெளியிட்டால் மக்களின் பொது அறிவும், நேர்மையை நாடி நிற்கும் அவர்களின் உள்ளார்ந்த உணர்வும் அவர்களை ஒன்று திரட்டி ஒற்றுமைப்படச் செய்யும் என்று எண்ணினார்.

அரசியல் வாதிகளில் பலர் இவ்வாறே பணிபுரிய முன்வந்தால் அதாவது இந்த ஆபத்தான வழியைத் தேர்ந்தெடுத்தால் நாட்டின் அரசியல் மாத்திரமல்ல நாட்டின் கொள்கைகள் கூட நன்றாக இருக்கும் என்றும் எண்ணினார். (தொடரும்)

ஐம்பொன்

# தமிழகத்திலுள்ள இலங்கை தூதரகத்தை அகற்ற வேண்டும் - த.பாண்டியன் வலியுறுத்து



தமிழகத்தில் உள்ள இலங்கை தூதரகத்தை அகற்ற வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநில பொதுச் செயலாளர் தா. பாண்டியன் வலியுறுத்தி யுள்ளார்.

இலங்கை தமிழ் பத்திரிகையாளர் திஸ்ஸ நாயகத் திற்கு, அந்நாட்டு அரசு 20 ஆண்டு சிறைத்தண்டனை விதித்ததை கண்டித்து, தமிழ்நாடு பத்திரிகையாளர்கள் சங்கம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பேசிய தா. பாண்டியன், இலங்கை தமிழர்களை ராஜபக்ஷ அரசு மின்சாரம் பாய்ச்சப்பட்ட முட்கம்பு வேலிக்குள் அடைத்து சித்ரவதை செய்து வருகிறது. அங்கு சென்றுவந்த ஐ.நா. பிரதி நிதியே இதை கூறுகிறார். ஆனால் இலங்கையில் பயங்கரவா தத்தை ஒழித்துவிட்டோம் என ராஜபக்ஷ அரசு சொல்கிறது.

இந்திய அரசு இதை கண்டிக்கவில்லை. இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ராஜபக்ஷவின் வெளியுறவுத்துறை அமைச்சராக செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்.


இலங்கையில் ஏற்பட்டுள்ள அவல நிலையை அமெரிக்கா கண்டிக்கிற அளவுக்குக் கூட இந்தியா கண்டிக்கவில்லை. பிரான்ஸ் நாட்டு எழுத்தாளர்கள், மனித உரிமை ஆர்வலர்கள் கண்டிக்கிற அளவுக்கு கூட மத்திய அரசு கண்டிக்கவில்லை.

நாம் அநியாயத்துக்கு அடி பணிந்து விடக்கூடாது. இலங்கை அரசின் அட்டூழியங்களை தடுத்து நிறுத்த நாம் கடைசிவரை போராட வேண்டும். இதற்காக தமிழக மக்களை ஒன்று திரட்டும் பணியை செய்ய வேண்டும்.

இலங்கையில் முட்கம்பி வேலிகளை பிரித்து, அங்குள்ள மக்களை அவர்களது சொந்த ஊரில் குடியேற அனுமதிக்க வேண்டும். இங்குள்ள இலங்கை தூதரகத்தை அப்புறப்படுத்த வேண்டும்.

இந்த இரண்டு நடவடிக்கைகளுக்காகவும் நாம் தொடர்ந்து போராட வேண்டும். இதற்கான இந்திய கம்யூனிஸ்ட் கட்சி முழு ஒத்துழைப்பு கொடுக்கும் என்றார். (ஓ-6)

# வைகோ மீது அவதூறு வழக்கு



(சென்னை)

முதலமைச்சர் கருணாநிதியின் நன்மதிப்பை பாதிக்கும் வகையில் பேசியதாக ம.தி. மு.க. பொதுச் செயலாளர் வைகோ மீது தமிழக அரசு அவதூறு வழக்கை தொடர்ந்துள்ளது.

சென்னையில் நடந்த கூட்டம் ஒன்றில் இலங்கை எம்.பி. சிவாஜிலிங்கம், சினிமா இயக்குனர்கள் பாரதிராஜா, சீமான் உட்பட பலர் பேசினார்கள். இந்த கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு வைகோ பேசினார்.

சினிமா இயக்குநர் பாரதிராஜாவின் அலுவலகத்தை அடித்து நொறுக்கியதற்கு ஏற்பாடு செய்தவரே முதலமைச்சர் தான் என்று வைகோ பேசியதாக செய்தி வெளியானது.

வைகோ பேசிய முதலமைச்சர் கருணாநிதியின் நன்மதிப்பை பாதிக்கும் வகையில் உள்ளது என்று தமிழக அரசு சார்பில் சென்னை மாநகர அரசு சட்டத்தரணி ஷாஜகான் அவதூறு வழக்கை தொடர்ந்துள்ளார்.

அவர் சென்னை செசன்சு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில் கூறியிருப்பதாவது,

முதலமைச்சர் கருணாநிதி 60 ஆண்டுகளுக்கு மேலாக பொதுவாழ்வில் உள்ளார் 5 ஆவது முறையாக முதலமைச்சராக பணி புரிந்து வருகிறார். சிறந்த நிர்வாகியாகவும், சமூக சேவகராகவும், நேர்மையாகவும், உண்மையாகவும் உழைத்து வருகிறார். பொது மக்களிடத்தில் அவருக்கு நல்ல மதிப்பு உள்ளது.

ஆனால் வைகோவின் பேச்சானத உண்மைக்கு புறம்பானதாகவும், முதலமைச்சரின் நன்மதிப்பை பாதிக்கும் வகையில் உள்ளது. ஆகவே, இந்திய தண்டனை சட்டம் 499 மற்றும் 500 ஆவது பிரிவின் கீழ் வைகோவை தண்டிக்க வேண்டும். இவ்வாறு மனுவில் கூறப்பட்டுள்ளது. இந்த மனு விரைவில் விசாரணைக்கு வரவுள்ளது. (ஓ-6)

# ராகுலுக்கு இணையாக விஜய்யா? காங்கிரசார் கடும் எதிர்ப்பு

காங்கிரஸ் கட்சியில் நடிகர் விஜய் சேர்வதற்கு முன்பே, அவரைப் புகழ்ந்து கோவையில் பதாதை வைத்திருப்பது காங்கிரஸ் கட்சியினரிடையே கடும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. நடிகர் விஜய் சமீபத்தில் ராகுல் காந்தியைச் சந்தித்ததைத் தொடர்ந்து அவர் காங்கிரஸ் கட்சியில் சேர்வார் என்று தகவல்கள் இறக்கை கட்டிப் பறக்கின்றன. ஆனால் வெளிநாட்டு வாழ் தமிழர்கள் உள்ளிட்ட பல முனைகளிலும் எதிர்ப்பு கிளம்பியதால் அந்த திட்டத்தை அவர் கை விட்டு விட்டதாகக் கூறப்படுகிறது.

அரசியலில் ஈடுபடுவது தொடர்பான தன் முடிபை விஜய் இன்னும் அறிவிக்காத நிலையில், அவரை ராகுல் காந்திக்கு இணையான தலைவராக வர்ணித்து கோவையில் பதாதைகள் வைக்ககப்பட்டுள்ளன.

இந்நிலையில் விஜய் ஸ்டாலினுடன் இருப்பதுபோலவும் ஸ்டாலின் கை கொடுப்பது போலவும் போஸ்டர் அடித்து கோவை நகரில் பல இடங்களில் ஒட்டப்பட்டுள்ளது.

இதனால் காங்கிரசர் கடும் அதிருப்தி அடைந்துள்ளனர். நடிகர் விஜய்யை முன்னிலைப்படுத்தி பதாதைகளை வைத்திருப்பது காங்கிரசாரின் கோபத்தை மேலும் அதிகப் படுத்தியுள்ளது. (ஓ-6)

# லண்டனில் இனவெறி தாக்குதல் இந்தியர் பலி ; 5 பேர் கைது

(புதுடில்லி)

லண்டனில் இடம்பெற்ற இனவெறி தாக்குதல் சம்பவம் ஒன்றில் தாக்குதலுக்கிலக்கான இந்தியர் ஒருவர் சிகிச்சை பலனளிக்காமல் மருத்துவமனையில் பலியாகியுள்ளார்.

இது தொடர்பாக ஐந்து பேரை ஸ்கொட்லாந்து யார்டு பொலிஸார் கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். கொல்கத்தாவைச் சேர்ந்த எக்ரம் உல்ஹாக் (வயது 67) என்பவரே இவ்வாறு மரணமாகியுள்ளார். இச்சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது,

கடந்த 31 ஆம் திகதி லண்டன், சேர்ச்லேன் டூடிங் பகுதியில் இருக்கும் மசூதி ஒன்றுக்கு சென்றுவிட்டு தனது நான்கு வயது பேத்தியுடன் திரும்பிக் கொண்டிருந்தார். அப்போது அந்த வழியாக வந்த 12 முதல் 15 வயது வரையிலான நான்கு சிறுவர்கள் எக்ரம் உல்ஹாக்கை கடுமையாக தாக்கியுள்ளனர்.

இந்த இனவெறி தாக்குதலில் பலத்த காயமடைந்த எக்ரம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். இந்நிலையில் கடந்த திங்கட்கிழமை அவரது நிலைமை மோசமடைந்து மூச்சுத் திணறல் ஏற்பட்டது. அவருக்கு செயற்கை சுவாச கருவிகள் பொருத்தப்பட்டது.

எனினும் அவர் சிகிச்சை பலனின்றி அன்றிரவு மரணமடைந்தார். இது குறித்து ஸ்கொட்லாந்து யார்டு பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (ஓ-6)

# திஸ்ஸநாயகத்தை விடுவிக்கக்கோரி சென்னையில் ஆர்ப்பாட்டம்

## பத்திரிகையாளர்கள் கைது

இலங்கை அரசின் சர்வாதிகார போக்கை கண்டித்தும் ஊடகவியலாளர் திஸ்ஸ நாயகத்தை விடுவிக்கக்கோரியும் தமிழ்நாடு பத்திரிகையாளர் சங்கம் சார்பில் நேற்று முன்தினம் சென்னையிலுள்ள இலங்கை துணைத் தூதரகம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது.

வைத்துள்ள அரசைக் கண்டித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பத்திரிகையாளர்கள், இலங்கைத் துணைத் தூதரகத்தை முற்றுகையிடச் சென்றபோது காவல் பொலிஸாரால் தடுத்து நிறுத்தப்பட்டுக் கைது செய்யப்பட்டனர்.

திஸ்ஸ நாயகத்திற்கு விதிக்கப்பட்ட 20 வருட கடூழியச் சிறைத் தண்டனையைக் கண்டித்து தமிழ்நாடு பத்திரிகையாளர் சங்கத்தின் சார்பில் அதன் தலைவர் ரவீந்திரதாஸ் தலைமையில் சென்னையிலுள்ள இலங்கைத் துணைத் தூதரகம் முன்பு நேற்று முன்தினம் மாலை ஆர்ப்பாட்டம் நடந்தது.



ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பத்திரிகையாளர்களைப் பொலிஸார் கைது செய்தனர். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் தா. பாண்டியன், துணை செயலாளர் சி. மகேந்திரன், விஜய டி. ராஜேந்தர், ரவீந்திரதாஸ், சீ. ஆர். பாஸ்கரன், உட்பட பலர் இதில் கலந்து கொண்டனர்.

இலங்கையின் தமிழ் ஊடகவியலாளர் ஜே.எஸ். திஸ்ஸநாயகத்தைப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்து சிறையில்

டி. ராஜேந்தர், பாஸ்கரன், பாஸ்கரதாஸ் ஆகியோர் உட்பட ஏராளமான பத்திரிகையாளர்கள் கைது செய்யப்பட்டு சிறிது நேரத்திற்கு பின் விடுவிக்கப்பட்டனர். (ஓ-6)

# இலங்கை கடற்படை தாக்குதலை தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்

## ராகுல்காந்தி மீனவர்களிடம் உறுதி



(நாகர்கோவில்)

தமிழ் நாட்டில் 3 நாள் சுற்றுப் பயணத்தை தொடங்கிய ராகுல் காந்தி நாகர் கோவிலில் நேற்று முன்தினம் குமரி மாவட்ட மீனவ இளைஞர்களை சந்தித்து பேசினார். அப்போது இலங்கை கடற்படை தாக்குதலை தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதி அளித்தார்.

அகில இந்திய காங்கிரஸ் பொதுச் செயலா ளராக பதவி வகித்து வரும் ராகுல்காந்தி எம்.பி. காங்கிரஸ் கட்சியை வலுப்படுத்த நடவடிக்கை எடுத்து வருகிறார்.

நாடு முழுவதும் சுற்றுப் பயணம் செய்து அதிக இளைஞர்களை காங்கிரஸ் சேர்ப்பது அவருடைய திட்டமாகும்.

இதற்காக பல்வேறு மாநிலங்களுக்கு சென்று இளைஞர்களை சந்தித்து பேசி வருகிறார்.

தமிழ் நாட்டில் ராகுல் காந்தியின் 3 நாள் சூறாவளி சுற்றுப் பயணம் நேற்று முன்தினம் தொடங்கியது. இதற்காக டெல்லியில் இருந்து விமானம் மூலம் நேற்று முன்தினம் காலை திருவனந்தபுரம் சென்ற அவர் அங்கிருந்து ஹெலிகொப்டரில் நாகர்கோவிலுக்கு புறப் பட்டார்.

நாகர்கோவில் ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரி கலையரங்கத்தில் ஆயிரத்து 500 மீனவ இளைஞர்களும், இளம் பெண்களும் அவரது வருகைக்காக தயாராக இருந்தனர். அவர்களுடன் ராகுல்காந்தி கலந்துரையாட ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது.

நிகழ்ச்சியில் ராகுல்காந்தி பேசும்போது,

இந்தியாவில் ஏழை - பணக்காரர் என்ற வேறுபாடு இல்லாத நிலை உருவாக வேண் டும் என்பதே எனது எண்ணம். ஏழைகள் படும்பாடு வெளியே வருவதில்லை. அதை எப்படி மாற்றுவது? என்பதின் தேடல்தான் எனது சுற்றுப்பயணத்தின் நோக்கம் என்றார்.

இதன்போது இளைஞர்களால் பல்வேறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

நடுக்கடலில் இலங்கை கடற்படையால் மீனவர்களுக்கு ஏற்படும் இன்னல்களைத் தடுக்க வேண்டும். மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கும் வகையில் வெளிநாட்டுக் கப்பல்கள் இந்திய கடல் பகுதியில் மீன்பிடிப்பதை தடுக்க வேண்டும் போன்ற பல கோரிக்கைகள் மீனவர்களால் முன்வைக்கப்பட்டன. இதற்கு பதிலளித்த ராகுல்காந்தி,

இதுபோன்ற தொல்லைகள் குஜராத் மீனவர்களுக்கு பாகிஸ்தான் கடற்படையினரால் ஏற்படுகிறது. எனவே இந்த 2 நாடுகளின் பிரச்சினைகள் பற்றியும் மந்திரி சபையில் சொல்லி நடவடிக்கை எடுக்க முயற்சி செய்வேன் என்று கூறினார். (ஓ-6)

# இன்று ஒரு தகவல்

## தசரதர் செய்த சபதம்

வாழ்க்கையில் ஒருசில சந்தர்ப்பங்களில் நாம்சில அவமானங்களைச் சந்தித்தே தீர வேண்டியுள்ளது. என்ன செய்வது? காலம் அப்படி! அவமானப்படுபவர்கள் உடனே அடங்கிப் போவது தான் உலக வழக்கம்.

அதற்கு மாறாக, தங்களுக்கு ஏற்பட்ட அவமானத்தையே ஒரு சவாலாக எடுத்துக் கொண்டு வாழ்க்கையில் முன்னேறுபவர்களும் உண்டு. ஆனால் அப்படிப்பட்டவர்கள் மிகவும் அபூர்வம் என்று தான் சொல்ல வேண்டும். மனோதத்துவ நிபுணர்கள் என்ன சொல்கிறார்கள் தெரியுமா?

''அவமானப்பட்டால் உடனே அடங்கி விடக்கூடாது. அதையே ஒரு சவாலாக எடுத்துக் கொண்டு மனதில் வைராக்கியத்துடன் முயற்சி செய்தால் வாழ்க்கையில் எல்லோருமே முன்னேறலாம்'' என்கிறார்கள்.

'அவமானம்' என்பதை நாம் 'வைராக்கியம்' – மன உறுதி – ஊக்கம் என்று மாற்றிக் கொள்ள வேண்டும். அதுதான் வெற்றிக்கு வழி.

இராமர் வைராக்கியம் காரணமாகத்தான் இவ்வுலகில் பிறந்தார் என்பதற்கு ஒரு கதை உண்டு.

'தசரதருக்கு இராமர் குழந்தையாக வந்து பிறக்க வேண்டும். அப்பொழுதுதான் இங்கிருக்கும் எல்லாக் கஷ்டங்களும் நீங்கும் என்று சர்வலோகமும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தது.

ஆனால் இராமர் எப்பொழுது வந்து பிறப்பார் என்று யாருக்கும் தெரியவில்லை. அந்தக் காரியம் விரைவில் நடைபெற வேண்டுமே! அதற்கு என்ன செய்வது? நாரதர் ஒருநாள் தசரதரைத் தேடி வந்தார்.

''தசரதா! உனக்கு ஒரு செய்தி தெரியுமா?'' என்று ஆரம்பித்தார்.

"என்ன விடயம்" என்று கேட்டார் தசரதர். அதற்கு நாரதர், "தசரதா! நீ உன்னுடைய தேரில் ஏறிக் கொண்டு தேவலோகத்துக்குப் போகிறாய் – வருகிறாய், அதெல்லாம் சரிதான்! தேவலோகத்திலும் உன்னை நல்லபடியாகத்தான் வரவேற்கிறார்கள். தேவேந்திரன் உன்னை அன்புடன் அழைத்துக் கொண்டு போய் தன்னுடைய அரியாசனத்தில் – தனக்குப் பக்கத்திலேயே உட்கார வைக்கிறான். நீயும் மகிழ்ச்சியுடன் உட்கார்ந்து அவனுடன் பேசிவிட்டு வந்து விடுகிறாய். ஆனால் நீ இங்கே வந்த பின்னர் அங்கே என்ன நடக்கிறது என்பது உனக்குத் தெரியுமா?" என்று கேட்டார்.

''என்ன நடக்கிறது? எனக்கு அதைப்பற்றி ஒன்றும் தெரியாதே!'' என்றார் தசரதர்.

நாரதர் அவருகே வந்து காதோடு காதாக, நீ தேவேந்திரனுடன் பேசிவிட்டு வந்தபின் நீ அங்கே உட்கார்ந்த அரியாசனத்தை தண்ணீருற்றி கழுவிச் சுத்தப்படுத்துகிறார்கள்! நீ என்ன அந்த அளவுக்கு சுத்தமில்லாதவனா? என்று கேட்டார். தசரதருக்கு இது மிகவும் அவமானமாகிப் போய் விட்டது. உடனே புறப்பட்டு தேவலோகம் சென்றார்.

அங்கே வழக்கம் போல் இவரை வரவேற்று உட்கார வைத்து பேசிக் கொண்டிருந்தான் தேவேந்திரன். சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு, புறப்பட்டார் தசரதர். தேவேந்திரனும் வாசல் வரை வந்து வழியனுப்பி வைத்தான்.

தசரதர் வெளியில் சிறிது நேரம் மறைந்திருந்து உள்ளே நடப்பதை எட்டிப் பார்த்தார்.

நாரதர் சொன்னது சரிதான்! தசரதர் உட்கார்ந்திருந்த ஆசனத்தை இரண்டு தேவர்கள் கழுவிச் சுத்தப்படுத்திக் கொண்டிருந்தார்கள்.

தசரதரால் இதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவருக்கு பெருத்த அவமானமாகிவிட்டது. கிடுகிடுவென தேவேந்திரனிடம் சென்று கேட்டார்.

அதற்கு தேவேந்திரன், "தசரதரே! மனிதனாகப் பிறந்தவனுக்கு மூன்று கடன்கள் உண்டு. அவற்றைத் தீர்க்காதவன் பாவியாகிறான். தேவர்களைப் பூஜிப்பதால் தேவகடன் தீருகிறது. ரிஷிகள் எழுதிய அருள் நூல்களைப் படிப்பதாலும், கேட்பதாலும் ரிஷிகடன் தீரும். உத்தமமான ஒரு நல்ல மகனைப் பெறுவதால் பித்ருகடன் தீருகிறது. உனக்கு அப்படி ஒருமகன் இல்லை.

எனவே நீ பாவியாகிறாய். பாவி உட்கார்ந்த இடம் என்பதால் அதைக் கழுவிச் சுத்தம் செய்வது எங்கள் கடமை'' என்றான். இங்கு தான் தசரதருக்கு ஏற்பட்ட அவமானம் ஒரு வைராக்கியமாகவே மாறுகிறது.

"தேவேந்திரா! நன்றாக கேட்டுக் கொள்! எல்லா வகையிலும் உத்தமமான ஒரு மகனைப் பெற்றபின் தான் இந்தச் சபையில் நான் மீண்டும் அடியெடுத்து வைப்பேன்'' என்று கூறி விட்டுச் சென்று விட்டார்.

பின் அவர் புத்திர காமேஷ்டியாகம் செய்து பிள்ளைகளைப் பெற்றார். தேவேந்திரன் தசரதரை அவமானப்படுத்தாவிட்டால் தசரதருக்கு அப்படியொரு வைராக்கியம் பிறந்திருக்குமா? யோசித்துப் பாருங்கள்.

நமக்கு ஏற்படும் சில அவமானங்களையும் வைராக்கியங்களாக மாற்றிக் கொண்டு வாழ்க்கையில் முன்னேறுவோமாக.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# யாழ்.மாவட்ட மட்ட தமிழ் தினப் போட்டி முடிவுகள்

(நேற்றைய தொடர்ச்சி)

**இசைதனி 3**

சி. கஜேந்திரன் (பரு. ஹாட்லிக் கல்லூரி), இருவர் இரண்டாமிடம் யெ. மதூசிகன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), ச. பூங்குன்றன் (வறணி மகா வித்தியாலயம்).

**இசை தனி - 4**

கு. மயூரதி (யாழ். இந்து மகளிர் கல்லூரி), ப. கௌசீகன் (பரு.ஹாட்லிக் கல்லூரி), கே. ரமேஷ் (எழுதுமட்டுவாள் அ.த.க. பாடசாலை).

**இசை தனி - 5**

வை. ரஞ்சினி (விக்ரோறியாக் கல்லூரி), பு. பிரணவன் (சென் ஜோன்ஸ் கல்லூரி), சு. விசாகன் (ஹாட்லிக் கல்லூரி).

**இசைக் குழு - 1**

யூனியன் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, ஹாட்லிக் கல்லூரி.

**இசைக் குழு - 2**

ஹாட்லிக் கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

**தனி நடனம் - பிரிவு -2**

சி. அபித்திரா (யாழ். இந்து மகளிர் கல்லூரி), கி. சிவானந்தி (விக்ரோறியாக் கல்லூரி), சி. சுஜிபா (பரு. மெ. பெ. உயர்தர பாடசாலை).

**தனி நடனம் - பிரிவு -3**

வ. ஸ்ரீதரா (வேம்படி மகளிர் கல்லூரி), ந. அபிராமி (விக்ரோறியா கல்லூரி), இ. பபிலா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி).

**தனி நடனம் -பிரிவு -4**

செ. ஆரணி (உடுவில் மகளிர் கல்லூரி), செ. பிரவீனா (வேம்படி மகளிர் கல்லூரி), ம. மயூரதி (சாவகச்சேரி இந்துக் கல்லூரி).

**தனி நடனம் - பிரிவு - 5**

க. பவன் (இணுவில் மத்திய கல்லூரி), ர. நர்மதா (யாழ். இந்து மகளிர் கல்லூரி), அ. நிலானி (சாவகச்சேரி இந்துக் கல்லூரி).

**நடனக்குழு - பிரிவு -1**

இராமநாதன் கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி, புங்குடுதீவு சுப்பிரமணிய மகா வித்தி.

**நாட்டிய நடனம்**

இணுவில் மத்திய கல்லூரி, இந்து மகளிர் கல்லூரி, மூன்றாமிடம் இருவர் – சாவக்சேரி மகளிர் கல்லூரி, மெ.பெ. உயர்தர பாடசாலை பருத்தித்துறை.

**நாட்டார் பாடல்**

ஹாட்லிக் கல்லூரி, யூனியன் கல்லூரி, நெடுந்தீவு ம.வி.

**இலக்கிய நாடகம்**

இராமநாதன் கல்லூரி, மத்திய கல்லூரி, கலாநிதி தியாகராசா ம.ம. வித்தியாலயம்.

**வில்லுப்பாட்டு**

யூனியன் கல்லூரி, வல்வை சிவகுரு வித்தியாலயம், இந்துக் கல்லூரி யாழ்ப்பாணம்.

**விவாதம்**

உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி, மகாஜனாக் கல்லூரி.

**தமிழறிவு வினாவிடைப் போட்டி**

மகாஜனாக் கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி, மெதடிஸ் பெண்கள் உயர்தர பாடசாலை பருத்தித்துறை.

**நாட்டுக்கூத்து**

அருணோதயாக் கல்லூரி, கோப்பாய் கிறிஸ்ரியன் கல்லூரி, வல்வை சிவகுரு வித்தியாலயம்.

**இசை நாடகம்**

இணுவில் மத்திய கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி, ஊர்காவற்றுறை புனித மரியாள் மகளிர் கல்லூரி,

**விசேட கூத்து**

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி, ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி,

**தென்மோடி**

யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம், விக்ரோறியாக் கல்லூரி.

**வடமோடி**

கைதடி – நாவற்குழி அ.த.க. பாடசாலை, ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம். (ஓ-35)



கொக்குவில் மேற்கு சி.சி.த.க.பாடசாலைக்கு கனடாவில் வாழும் மேற்படி பாடசாலையின் முன்னாள் அதிபர் திருமதி பத்மாவதி சின்னராசாவினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட பணத்தொகையினை பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் முன்னிலையில் கொக்குவில் மேற்கு சனசமூக நிலைய செயலாளர் செ. சண்முகசுந்தரம் பாடசாலை அதிபர் திருமதி மங்கள கௌரி தயாளநேசனிடம் கையளிப்பதைப் படத்தில் காணலாம்.

# இராசி பலன்

*10.09.2009*
*(ஆவணி 25, வியாழக்கிழமை)*
*சஷ்டி முன்னிரவு 8.15 மணிவரை*
*கார்த்திகை பின்னிரவு 3.56 மணிவரை*
*இராகுகாலம் 1.33 - 3.03 மணிவரை*
*சுபநேரம் 7.33 - 9.03 மணிவரை*
*கார்த்திகை விரதம்*

| | |
|---|---|
| மேடம் | கடின வார்த்தை, எடுத்த காரியம் தாமதமாகும், தனவிரயம், ரோக நிலை. |
| இடபம் | நண்பர்கள் உதவி, நல்ல முயற்சி, போசன சுகம், சயனசுகம். |
| மிதுனம் | காரிய அலைச்சல், உறவினர் சந்திப்பு, தொழில் நன்மை, தனவிரயம். |
| கடகம் | மனமகிழ்ச்சி, எடுத்த காரியம் கைகூடும், பெருமையடைதல், போசன சுகம். |
| சிங்கம் | தூரதேசச் செய்தி, சுபநிகழ்வு, செய்தொழில் விருத்தி, முயற்சி கைகூடும். |
| கன்னி | திடீர் பயணம், ஆன்றோர் சந்திப்பு, அதிக பிரயாசை, பயந்த சுபாவம். |
| துலாம் | வாகன பயம், எதிரிகள் தொல்லை, தொழில் நன்மை, முயற்சி தாமதம். |
| விருச்சிகம் | புதிய திருப்பம், சென்ற இடத்தில் செல்வாக்கு, பணவருவாய், உடல் நலம். |
| தனுசு | நோய் குணமடைதல், திடீர் பயணம், சத்துரு ஜெயம், காரிய அனுகூலம். |
| மகரம் | காரிய இடையூறு, தனவிரயம், சிறுவியாதி, தாழ்ந்த சுபாவம். |
| கும்பம் | பயந்த சுபாவம், புதிய தகவல், சுபசெலவு, உறவினர் சந்திப்பு. |
| மீனம் | இனிய சம்பவம், பிரயாண நன்மை, அந்நியர் சந்திப்பு, தனலாபம். |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 120 | 100 |
| உருளைக்கிழங்கு | 70 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 60 | 80 | 70 |
| தக்காளி | 30 | 40 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 40 |
| கோவா | 130 | 140 | -- |
| கரட் | 80 | 90 | 90 |
| பூசணி | 30 | 40 | 40 |
| புடோல் | 20 | 30 | 30 |
| வாழைக்காய் | 35 | 50 | 40 |
| சின்ன வெங்காயம் | 50 | 60 | 60 |
| பெரிய வெங்காயம் | 50 | 60 | 40 |
| பாகற்காய் | 40 | 50 | 40 |
| வெண்டிக்காய் | 20 | 40 | 30 |
| கரணைக் கிழங்கு | 40 | 50 | 50 |
| பயிற்றங்காய் | 30 | 40 | 40 |
| லீக்ஸ் | 80 | 100 | 80 |
| பீற்றூட் | 30 | 40 | 60 |
| கறிமிளகாய் | 60 | 80 | 60 |
| முருங்கைக்காய் | 80 | 100 | 80 |
| கீரை - 1 பிடி | 150 | 20 | 20 |
| தேசிக்காய் | 60 | 80 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 30 | 25 |



இலங்கைக்கான பஜாஜ் முகவர்களான டேவிட் பீரிஸ் மோட்டோர்ஸ் கம்பனி தனது காட்சி அறையை நேற்று யாழ். பிரதான வீதியில் திறந்து வைத்தது. இவ் காட்சியறையை யாழ். மறைமாவட்ட ஆயர் வண.தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை நாடா வெட்டி திறந்து வைப்பதையும் நிகழ்வில் கலந்துகொண்ட விருந்தினர்களையும், முதலாவது விற்பனையை நிறுவனத்தின் வடபிராந்திய முகாமையாளர் டேவிட் ஸ்ரைறிஸ், யாழ். ஆயருக்கு மோட்டார் சைக்கிள் ஒன்றின் விற்பனைப்பத்திரத்தை வழங்கி வைப்பதையும் வாடிக்கையாளர்கள் மோட்டார் சைக்கிள்களை பார்வையிடுவதையும் படங்களில் காணலாம்.

# யாழ்ப்பாணத்தில் உயர் கல்வியை மேம்படுத்துவதில் புலம்பெயர் தமிழ் சமூகத்திற்கு ஆர்வமில்லை

## இலங்கை முதலீட்டுச் சபை குற்றச் சாட்டு

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் உயர் கல்வி நடவடிக்கைகளை மேம்படுத்துவதில் புலம் பெயர் தமிழ்ச் சமூகம் அக்கறை காட்டவில்லை. போருக்கு உதவுவதிலேயே ஆர்வ மாக இருக்கின்றது என்று இலங்கை முதலீட்டுச் சபையின் தலைவரான தம்மிக்க பெரேரா குற்றஞ் சாட்டியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது,

யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம் ஒன்றை தொடங்குவதற்காக 25 மில்லியன் டொலர் திட்டம் ஒன்றுடன் புலம் பெயர் தமிழ்ச் சமூகத்தை நான் அனுகினேன்.

ஆனால் தாம் போருக்கு பணம் கொடுப்பதில் மட்டுமே ஆர்வமாக இருக்கின்றார்கள் என்று தெரிவித்து விட்டார்கள். கல்விக்காக பணம் தர அவர்கள் தயாரில்லை.

தற்போதுள்ள நிலையில் யாழ்ப் பாணத்திற்கு முதலீடுகளையோ சுற்றுலா நடவடிக்கைகளையோ கொண்டு வருவது மிகவும் சிக்கலானது நாட்டின் தென்பகுதிக்கும் யாழ்ப்பாணத்திற்குமான போக்கு வரத்து சீரில்லாமல் இருப்பதே அதற்குக் காரணம்.

யாழ்ப்பாணத்திற்கான தரை வழிப்பாதை இன்னும் முழுமையாக மக்கள் போக்கு வரத்திற்கு திறக்கப்படவில்லை.

அத்துடன் வன்னிப் பிரதேசம் கண்ணி வெடிகளிடம் இருந்து இன்னமும் துப்புரவு செய்யப்படவில்லை. ஆனால் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞர்கள் மேற்படிப்பைத் தொடர்ந்து நாட்டின் பிறபகுதிகளில் அல் லது வெளிநாடுகளில் வேலை வாய்ப்பை தேடிக் கொள்வதற்கான சந்தர்ப்பங்கள் அதிகரித்துள்ளன.

இதனாலேயே யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம் ஒன்றை தொடங்கும் திட்டத்தில் புலம்பெயர் தமிழ் சமூகத்தையும் வெளிநாடுகளில் உள்ள அமைப்புக்களையும் ஈடுபடுத்துவதற்கு முதலீட்டுச்சபை முடிபு செய்தது. என விளக்கம் அளித்தார். தம்பிக்க பெரேரா .

புலம் பெயர் தமிழ் சமூகம் மட்டுமல்ல வேறு எந்தவொரு நாடும் கூட இந்தத் திட்டம் குறித்து ஆர்வம் காட்டவில்லை என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(ஓ-6)

# தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு கிடைக்கும் வரை போராட்டம் தொடரும்

## அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் தெரிவிப்பு

(கொழும்பு)

தோட்டத் தொழிலாளர்களுக்கு 500 ரூபா சம்பள அதிகரிப்பை பெறும் வரை ஒத்துழையாமை, போராட்டம் தொடர்ந்து நடைபெறும் என்று இளைஞர் வலுவூட்டல் அமைச்சரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இளைஞர் வலுவூட்டல் அமைச்சில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது,

தோட்டத் தொழிலாளர்களுக்கு 500 ரூபா சம்பள அதிகரிப்பை பெற்றுக்கொடுக்கும் நோக்கில் நாங்கள் ஒத்துழையாமை போராட்டத்தை ஆரம்பித்துள்ளோம்.

கடந்த சில தினங்களாக இந்த போராட்டம் மிகவும் வெற்றிகரமாக இடம்பெற்று வருகின்றது.

முதலாளிமார் சம்மேளனத்துடன் இறுதியாக நடத்திய பேச்சு வார்த்தையின் போது முதல் வருடத்துக்கு 330 ரூபாவும் இரண்டாம் வருடத்தில் 360 ரூபாவும் சம்பள அதிகரிப்பு வழங்க இணக்கம் தெரிவித்தன.

ஆனால் நாங்கள் அதனை முற்றாக நிராகரித்து விட்டோம் நாங்கள் 500 ரூபா சம்பள உயர்வை பெறும் வரை இந்தப் போராட்டத்தை நடத்துவோம் மிகவும் நியாயமான முறையிலேயே இந்தச் சம்பள அதிகரிப்பைக் கோருகின்றோம். இன்று அரச சேவையில் பணியாற்றும் அலுவலக உதவியாளர் களுக்கு 11 ஆயிரத்து 500 அடிப்படை சம்பளமும் ஆயிரம் ரூபா கொடுப்பனவும் கிடைக்கின்றன.

எனவே எமது மக்களுக்கு நாளொன் றுக்கான சம்பளத்தை அதிகரிக்குமாறு கோருகின்றோம் என்றார்.

(ஓ-6)


# வேலை வாய்ப்பு

இலங்கை காப்புறுதி வரலாற்றில் கடந்த 22 வருடங்களைக் கடந்து மிகச் சிறப்பான சேவையினை வழங்கி வரும் யூனியன் அஷ்யூரன்சின் யாழ். பிரதான கிளைக்கு : துடிப்பு மிக்க வாழ்வில் சாதிக்க வேண்டும் என்ற பேரவா கொண்ட உங்களது இலக்கை அடைவதற்கான உறுதியான மனோநிலை கொண்ட 18 வயதிற்கு மேற்பட்ட இருபாலாரும் சுய விபரக் கோவையுடன் நேர்முகப் பரீட்சைக்கு சமூகம் தரவும்.

எமது முன்னேற்றம் எமது கைகளில்

**பதவிகள்**

- காப்புறுதி ஆலோசகர்
- தனிப்பட்டோர் நிதி ஆலோசகர்
- சிரேஷ்ட தனிப்பட்டோர் நிதி ஆலோசகர்
- தனிப்பட்டோர் நிதி முகாமையாளர்
- சிரேஷ்ட தனிப்பட்டோர் நிதி முகாமையாளர்

**தகைமைகள்**

- கா.பொ.த. சாதாரண தரம் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி
- க.பொ.த. உயர்தரம் சித்தி
- முன் அனுபவம் விரும்பத்தக்கது (முக்கியம் அல்ல)

**வசதி வாய்ப்புக்கள்**

- வரையறுக்கப்படாத ஊதியம்
- ஓய்வூதிய வசதி
- இலவச ஆயுள் காப்புறுதி வசதி
- இலவச வெளிநாட்டு சுற்றுலாப் பயணங்கள்
- SLII பரீட்சையில் சித்தியடைந்து தொழிற் தகைமை சான்றிதழைப் பெறும் வசதி
- வாகன கார் வசதிகள்
- மோட்டார் சைக்கிள் வசதிகள்
- மொபைல் வசதிகள்
- லப்ரொப் வசதிகள் அத்துடன் மொபைல், இன்ரநெற்,பக்கேஜ் வசதிகள்
- திறமைக்கு ஏற்ப காலாண்டு வருடாந்த போட்டிகளில் பங்கு பற்றி பரிசில்களை பெறும் வாய்ப்பு
- வளர்ச்சியின் வேகத்திற்கு ஏற்ப விரைவான பதவி உயர்வுகள்

**NOTE:** அரச தனியார் துறைகளில் வேலை புரிபவர்கள் or ஓய்வு பெற்றவர்கள் பகுதி நேரமாக தொழில் புரிய ஓர் அரிய வாய்ப்பு

**அரிய சந்தர்ப்பத்தை தவற விடாதீர்கள் !!!**

உடன் நேர்முகத் தேர்வுக்கு விரையுங்கள்.

இடம் : யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதான மண்டபம்
139 ,ஸ்ரான்லிறோட் , யாழ்ப்பாணம்
(டயலொக் அருகாமை)

காலம்: 14.09.2009 திங்கட்கிழமை

நேரம் : 9.30 -12.30

மேலதிக தொடர்புகளுக்கு : 021 222 3753

எமது நிறுவனத்தில் இணைவதன் ஊடாக நீங்கள் காப்புறுதி உலகில் அங்கீகரிக்கப்படுகிறீர்கள்

க.தீசன் ,வ.நேமன்
காப்புறுதி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்

(3396)


# கூட்டமைப்பு எம்.பிகளுக்கு எதிரான வழக்கை தள்ளுபடி செய்யவும்

## சிரேஷ்ட சட்டத்தரணி மன்றில் கோரிக்கை

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் நால்வருக்கு எதிராக குற்றப் புலனாய்வுப் பொலிஸாரினால் கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கினை தள்ளுபடி செய்யுமாறு சிரேஷ்ட சட்டத்தர[illegible], தவராசா நேற்று முன்தினம் மன்றில் கோரிக்[illegible] விடுத்துள்ளார்.

இந்த வழக்கு [illegible] நேற்று முன்தினம் கொழும்பு பிரதம நீதிவான் நிஸாந்த ஹப்பு ஆராச்சி முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது பிரதிவாதிகளின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி மேலும் கூறியதாவது,

கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களான கனகலிங்கம் சிவாஜிலிங்கம், சேனாதிராஜா,ஜெயனானந்தமூர்த்தி, அரியநேத்திரன்,பாக்கிய செல்வம்,செல்வராஜா கஜேந்திரன் ஆகிய நான்கு எம்.பிகளும் அரசியல் அமைப்பு பிரிவு 157 (ஆ) பிரிவைச் மீறியதன் மூலம் நாட்டுப்பிரிவினைக்கு ஆதரவளித்து வெளிநாடுகளில் நடைபெற்ற பொங்கு தமிழ் நிகழ்ச்சிகளில் உரையாற்றியதன் மூலம் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தவறு புரிந்திருப்பதாகவும் அதனை விசாரணை செய்ய வேண்டும் என குற்றப் புல னாய்வுப் பிரிவு தெரிவித்து இந்த வழ்க்குத்தாக்கல் செய்யப்பட்டது.

கடந்த 20 மாதங்களாக குற்றப் புலனாய்வுப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த தவணையன்று சட்டமா அதிபரின் ஆலோசனையினை பெறப்போவதாக இந்த நீதிமன்றத்தில் குற்றப்புலனாய்வுப் பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

ஆனால் இது விடயம் தொடர்பாக எந்த வித அறிக்கையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை.

குற்றப்புலனாய்வுப் பொலிஸ் சார்பில் உதவிப் பொலிஸ் அத்தியட்சர் இந்த நீதி மன்றில் ஆஜராகியிருந்தார். ஆனால் தற்போது எவருமே ஆஜராகவில்லை. அரசியல் அமைப்புச் சட்டத்தை யாராவது மீறி இருந்தால் அதற்குரிய வழக்கினை தாக்கல் செய்ய வேண்டிய நீதிமன்றம் மேல் முறையீட்டு நீதிமன்றமே தவிர இந்த நீதிமன்ற மல்ல.

பிழையான நீதிமன்றத்திற்கு வந்து இந்த வழக்கை குற்றப்புலனாய்வுப்பொலிஸார் தாக்கல் செய்தமை சட்டத்திற்கு முரணானதாகும். எனவே இந்த நீதிமன்றம் குற்றப் புலானாய்வுப் பொலிஸாரின் காரணங்களைக் கருத்தில் கொள்ளாது வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று வாதிட்டார்.

இந்த வாதத்தை செவிமடுத்த பிரதான நீதவான் நிசாந்த ஹப்பு ஆராய்ச்சி அடுத்த தவணை வழக்கில் குற்றப்பு லனாய் வுப் பொலிஸார் அஜராக வேண்டும் என உத்தரவிட்டு விசாரணையை அடுத்த மாதம் 6ஆம் திகதி ஒத்தி வைத்தார்.

(ஓ-6)

# வன்னி வலயக் கல்வி அலுவலகங்களிலிருந்து மீட்கப்பட்ட சுய விபரக் கோவைகளின் விபரங்கள்

முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் துணுக்காய் ஆகிய கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கடமையாற்றிய ஆசிரியர்களின் ஒரு பகுதியினருடைய சுயவிபரக் கோவை கிடைக்கப் பெற்றுள்ளதாக வடக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர் வீ.இராசையா தெரிவித்தார்.

இவ்வாறு கிடைக்கப்பெற்ற சுய விபரக் கோவை களுக்குரிய அதிபர், ஆசிரியர்களின் விபரம் வருமாறு,

என்.வினோதன் (பனிக்கன்குளம் அ.த.க.பாடசாலை), எஸ். வேலாயுதபிள்ளை (ஒட்டுசுட்டான் இ.த.க. பாடசாலை), கே. ஜெயதீபன் (பெரிய புளியங்குளம் அ.த.க.பாடசாலை), திருமதி. வி. நித்தியகலா (ஒட்டுசுட்டான் இ.த.க.பாட சாலை), கே. பஞ்சலிங்கம் (முத்தையங்கட்டு இடது கரை (அ.த.க. பாடசாலை), என்.சர்வேஸ்வரநாதன் (ஒலுமடு தமிழ் வித்தி), ரி. ராஜேஸ் வரன் (கதலியார் சமலன்குளம் அ.த.க.பாடசாலை).

எஸ். நாகேந்திரராஜா (கச்சிலைமடு அ.த.க.பாடசாலை), திருமதி. ரி. ஜீவகுமார் (கரிப்பட்ட முறிப்பு அ.த.க.பா), கே. செல்வாநந்தம் (கருவேலன்கண்டல் அ.த.க.பாடசாலை), எஸ்.செல்வரட்ணம் (குலாமுறிப்பு அ.த.க. பாடசாலை), பி. சற்குணசீலன் (பேராறு தமிழ் வித்தி), ஏ. சூசைநாதர் (திருமுறுகண்டி மகா வித்தி.

எஸ். சத்தியசீலன் (விநாயகபுரம் அ.த.க.பாடசாலை), ரி. பங்கையற்செல்வன் (மாங்குளம் மகா வித்தி), வி. பன்னீர் செல்வன் (தண்டுவன் அ.த.க.பாடசாலை), பி. பாலேஸ்வரன் (பாலைப்பானி தமிழ் வித்தி), கே. பாலேஸ்வரன் (அலைக்கல்லுப்பட்டகுளம் அ.த.க.பாடசாலை).

திருமதி. எம். வைத்திலிங்கம் (அம்பாள்புரம் அ.த.க.பாடசாலை), என். கருணாகரன் (ஒட்டுசுட்டான் மகா வித்தி), எஸ். அரியராசா (பெரியாத்திமடு அ.த.க.பாடசாலை), எஸ். பாஸ்கரன் (மர்மடுபழம்பசி அ.த.க.பாட சாலை), கே. யோகேஸ்வரன் (முத்தையன் கட்டு ஆர்.பி. அ.த.க.பாடசாலை).

திருமதி . எஸ். லீலாவதி (ஒட்டுசுட்டான் இ.த.க. பாடசாலை),திருமதி. வத்சலா மகேந்திரா, திருமதி. சுசித்ரா ரவிக்குமார், திருமதி விஜய சித்திராசேகர், செல்வி. நாரா யணப்பிள்ளை காயத்திரி, செல்வி. ராசையா சரோஜினி தேவி, திருமதி. கமலாதேவி மனோகரன், திருமதி. திலாகவதி விஸ்வலிங்கம், செல்வி. கமல வேணி ராசன், செல்வி. பற்குணராஜா ஜீவா ஜினி, திருமதி. அஜந்தா கபிலன், திருமதி தவமலர் செல்வரட்ணம் (மு/ தண்ணீயூற்று இந்துக்கோட் தமிழ்க் கல்வன் பாடசாலை).

திருமதி உஷா அரவிந்தன், திரு. சபாரட்ணம் விக்னேஸ்வரன், செல்வி. சுசிதா திருநாமராசா, செல்வி கோகிலா முத்துகுமாரசாமி , செல்வி. ஏ. அருள்நாயகம் (கோகுலை அ.த.க. பாடசாலை), திருமதி நடாசினி சந்திரராஜா, திருமதி ஜெயநிலா சுந்தரமூர்த்தி (கலைமகள் வித்தியாலயம்), திருமதி.மேரிஜோசப்பன் மரியதாஸ், திருமதி வி.பாக்கியநாதன் (முல்லைத் தீவு றோ.க.த.க.பாடசாலை).

திருமதி ஜீவாஜினி ராஜராஜன் (கலைப்பாடு ஜி.ரி.எம்.எஸ்), செல்வி ராஜரட்ணம் வனிதா (உடையார் கட்டு மகா.வி), திருமதி விஜயகுமார் தங்கராசா (புதுக்குடியிருப்பு சி.சி), திருமதி வில்வராஜ் உதயசிறி (அம்பலவன் பொக்கணை மகா.வி.), திருமதி வாசுகி தவசீலன் (முல்லைத்தீவு ஏச்.பி.ரி. எம்.எஸ்), திருமதி ராஜேந்திரா அச்சுதா, செல்வி சுஜா தாராமச்சந்திரன் (முல்லைத்தீவு).

மத்தியூஸ் கிளையன் திரு. கணபதிப்பிள்ளை விநாயகமூர்த்தி (முல்லைத்தீவு இந்துப் போட் த.க.பாடசாலை) திருமதி பகீரதி சசீகரன், செல்வி. ராஜவதனி தர்மலிங்கம், பி.சிவகணேசன் ,திருமதி. விமலாதேவி ஜெயசீலன்,திரு. எஸ். யோகேஸ்வரன் (உணப் பிளவு ஜி.ரி.எம்.எஸ்), திரு. எஸ். யோகேஸ்வரன், திருமதி. மேரி சுசி யேசுதாஸன் (முல்லைத்தீவு மகா.வித்).

திரு நாகராசா ஆக்னேஸ்வரன், திருமதி பாரதி பரமேஸ்வரன் (நெத்தலியாறு தமிழ் வித்தி , திருமதி ஜெயா உதயகுமார், திருமதி பேரின்ப நாயகி பகீரதன், திருமதி. சிவராணி தங்கமயில் (கைவேலி கணேசா வித்தி), செல்வி. துரைசிங்கம் மஞ்சுளா , செல்வி. சுப்பிரமணியம் ரமா, திரு . சிவனொளிபாதம் சிவகுமாரன், திருமதி. தபோதினி வசந்தகுமார் .

கனகசபை செந்தில்வேல், சந்தியாப்பிள்ளை அல்வேனுப்பிள்ளை, திருமதி சுசிலாதேவி குமாரசாமி, திருமதி கமலினி குணரட்ணம், திரு. விவேகாநந்தம் சுதாகர், திரு. அந்தோனிப்பிள்ளை மங்களதாஸ் (வெட்டுவாய்க்கால் அ.த.க.பாடசாலை), திரு மாணிக்கம் செல்வராஜா, எஸ். யோகதாஸ், திரு. கணபதிப்பிள்ளை ஜெகதாஸ், திருமதி. இஸ்தனெற் தோமஸ்மெய்ற்லென், திருமதி. கே. வனிதயோதி.

திருமதி. ரி. சண்முகநாதன், திருமதி. கே. மேரிகமலா, திருமதி. ரி. சசிகுமார், திருமதி. தேக குல ரஞ்சனிதேவி (முல்லைத்தீவு மந்துவில் அரச ரெட்ணம் வித்தி, திரு. எஸ். தட்சணாமூர்த்தி, திருமதி. எஸ். விக்னேஸ்வரன் (வலைஞர் மடம் அ.த.க. பாடசாலை) , திரு. என். இராமநாதன், திரு. கே. அஜந்தன், திருமதி. கோகிலாதேவி வீரசிங்கம், பாலசிங்கம் குண்பாலன், திரு. கே. கமலேஸ்வரன், திரு. எஸ். சிறிஸ்கந்த ராஜன், திரு. ஏ. சுகுணதாஸ், திரு. எம். பகீர தன், திருமதி. எஸ் நவசிங்கம், திரு. வேலுமயிலும் நந்தகுமார், திரு. ரி. ஜெயசூரியா(உடுப்புக்குளம் தமிழ் வித்தி), திருமதி. எஸ். க்ணேசலிங்கம் (செம்மலை மகா.வித்) .

## இலங்கையில் இருந்து இந்தியாவுக்கு ஏற்படும் பாதுகாப்பு அச்சுறுத்தல் குறித்து ஆராய்வு

(கொழும்பு)

இலங்கை மற்றும் ஆசிய நாடுகளில் இருந்து இந்தியாவுக்கு ஏற்படுகின்ற பாதுகாப்பு அச்சுறுத்தல் குறித்து இந்தியப் புலனாய்வுப்பிரிவினர் ஆராயவுள்ளனர்.

இதற்காக எதிர்வரும் 21ஆம் 22ஆம் திகதிகளில் இந்தியப் பிரதமரின் தலைமையில் மாநாடு ஒன்று புதுடில்லியில் இடம் பெறவுள்ளது.

இதில் இந்தியப் புலனாய்வுப்பிரிவைச் சேர்ந்த 24 இணைப்பணிப்பாளர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் பங்குபற்றவுள்ளனர்.

அத்துடன் இந்திய உள்துறை அமைச்சர் வெளி விவகார அமைச்சர் மற்றும் பாதுகாப்பு அமைச்சரும் இதில் பங்குபற்றவுள்ளனர்.

இதன் போது எல்லைப்புற பாதுகாப்புத் துறை மத்திய பாதுகாப்பு துறை மற்றும் தேசிய பாதுகாப்புத்துறை ஆகியன தமது அறிக்கைகளை சமர்ப்பிக்கவுள்ளனர்.

இதேவேளை இரண்டாம் நாளான 22ஆம் திகதி இந்திய மத்தியப் புலனாய்வுப் பிரிவான ரோ தலைமையகத்திற்கு விஜயம் செய்யும் மாநாட்டில் பிரதிநிதிகள் இலங்கையில் இருந்தும் பாகிஸ்தானில் இருந்தும் ஏற்படும் அச்சுறுத்தல் குறித்து கலந்துரையாடவுள்ளனர். (ஓ-6)

## மத்திய வங்கியினால் சர்வதேச மட்டத்தில் பங்குகள் விற்பனை

(கொழும்பு)

மத்திய வங்கி அடுத்த மாதம் 50 கோடி டொலர் பெறுமதியான பங்குகளை சர்வதேச மட்டத்தில் விற்பனை செய்ய திட்டமிட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் முன்னோடி முகாமையாளர்களாக செயற்படுவதற்கு சர்வதேச வங்கிகள் முதலீட்டு நிறுவனங்கள் அடங்கிய 7 அமைப்புக்கள் யோசனைகளை முன் வைத்துள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இந்த யோசனைகளை மத்திய வங்கியினதும் நிதியமைச்சினதும் சிரேஷ்ட அதிகாரிகள் உள்ளடங்கிய குழு பரிசீலித்து வருகின்றது. முன்னோடி முகாமையாளர்கள் இம்மாத நடுப் பகுதிக்குள் நியமிக்கப் படவுள்ளனர். (ஓ-4)

## நாட்டில் புற்று நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

சுகாதார அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் புற்று நோயாளர்கள் கிரமமாக, அதிகரித்துச் செல்வதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. 2008 ஆம் ஆண்டு ஆயிரம் பேர் வரையில் நோய்த்தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளமை பதிவாகியுள்ளதென புற்றுநோய் ஒழிப்பு செயற்றிட்ட வைத்தியப் பணிப்பாளர் டபிள்யூ. எம். என்.பி. பரணகம தெரிவித்துள்ளார்.

புற்று நோய் தொடர்பான அறிகுறிகள் ஆரம்பத்திலேயே கண்டுபிடிக்கப்பட்டால் அந்த நோய்க்கு வெற்றிகரமான முறையில் சிகிச்சை அளிக்கக் கூடியதாக இருக்குமென அவர் சுட்டிக் காட்டினார். (ஓ)

## உயர் தொழில் நுட்ப வியல் நிறுவன பழைய பாடத்திட்டத்திற்கான பரீட்சை

இலங்கை உயர் தொழில் நுட்பவியல் நிறுவனத்தில் தற்போது நடைபெற்று வரும் பருவகாலப் பரீட்சைக்கு முன்னர் யாழ்ப் பாண உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தில் கல்வி கற்று பரீட்சையில் சித்தியடையத் தவறியவர்களுக்கும் பரீட்சைத் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட பரீட்சையில் சித்தியடையத் தவறிய 1,2, 3, 4 ஆம் வருட HNDA, HNDC, NDBF , NDBS, NDE கற்கை நெறிகளுக்கான பரீட்சை எதிர்வரும் 19 ஆம் திகதி முதல் கொழும்பில் நடைபெறவுள்ளது.

இப்பரீட்சை இறுதித் தடவையாக நடைபெறவுள்ளமையால் இச் சந்தர்ப் பத் தைப் பயன்படுத்திக்கொள்ளும் முகமாக பரீட்சைக்கு தோற்ற விண்ணப்பித்தவர்களும் விண் ணப்பிக்கத் தவறியவர்களும் யாழ்ப் பாண உயர் தொழில்நுட்ப நிறுவனத் தில் நாளை மறுநாள் சனிக்கிழமைக்கு முன்னர் தமது பதிவுகளை உறுதிப்படுத்திக் கொள்ளு மாறு யாழ்ப்பாண உயர் தொழில் நுட்ப வியல் நிறுவன பழைய மாணவர் சங்கச் செயலாளர் வி. தயாபரன் கேட்டுக் கொள்கின்றார். (ஓ-4)


## பதவி வெற்றிடம்

இலங்கையின் முன்னோடி நிறுவனமொன்றின் யாழ்ப்பாணத்தில் அமைந் துள்ள அலுவலகம், காட்சியறையில் பணிபுரிய கீழ்க்காணும் உத்தியோகத்தர்கள் தேவைப்படுகின்றனர்.

- நிறைவேற்று அதிகாரி-யாழ்ப்பாணம்
(Executive in charge of Jaffna centre )

இப்பதவிக்கு தெரிவு செய்யப்படுபவர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து கடமையாற்றக் கூடியவர்களாகவும் காட்சியறை மற்றும் அலுவலகத்தின் நிர்வாகப் பொறுப்பை ஏற்று நடத்தக்கூடிய சுறுசுறுப்பும் திறமையும் உள்ளவராகவும் எமது நிறுவனத்தை அபி விருத்தி செய்யக்கூடிய செயற்திறன் மிக்கவராகவும் இருத்தல் வேண்டும் .

### விண்ணப்பதாரிக்கு இருக்க வேண்டிய தகைமைகள்

- 5-10 வருட வர்த்தகச் சூழலில் வேலை அனுபவம்
- ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளில் சிறந்த தொடர்பாடல் திறமை
- சிங்கள மொழி தொடர்பாடல் விரும்பத்தக்கது
- கணனியைக் கையாளுவதில் சிறந்த தேர்ச்சி
- வயது -30 வயதுக்குட்பட்டிருத்தல்
- கணக்கு சார் முகாமைத்துவத்தில் திறமை
- க.பொ. த உயர்தரத்தில் சித்தி ,
- க.பொ.த சாதாரண தரத்தில் கணிதம் மற்றும் ஆங்கிலத்தில் திறமைச்சித்தி
- சந்தைப்படுத்தலில் அனுபவம் விரும்பத்தக்கது.

வாடிக்கையாளர் சேவை உதவியாளர் -யாழ்ப்பாணம்
(Customer Service Assistant/ Executive of Jaffna Centre)

இப்பதவிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து கடமையாற்றக்கூடிய சுறு சுறுப்பும் திறமையுமுடைய பெண் விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

### விண்ணப்பதாரிக்கு இருக்க வேண்டிய தகைமைகள்

- தமிழ் , ஆங்கிலம் ஆகிய மொழிகளில் சிறந்த தொடர்பாடல் திறமை
- கணனியை கையாளுவதில் தேர்ச்சி
- 30 வயதுக்குட்பட்டவராக இருத்தல்
- குறைந்தது 5 வருட வாடிக்கையாளர் சேவை அனுபவம்
- க.பொ.த. உயர்தரத்தில் குறைந்தது இரு பாடங்களில் சித்தி
- க.பொ.த. சாதாரண தரத்தில் கணிதம் மற்றும் ஆங்கிலத்தில் திறமைச்சித்தி

(மேலதிக தகவல்களுக்கு: 077 2620974 ,077 3033801 என்ற இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்)

APPLY WITHIN 7 WORKING DAYS BY E-MAIL TO careers@hayleys.com OR, BY POST TO THE GENERAL MANAGER, HR MANAGEMENT DIVISION, HAYLEYS LIMITED, 25 FOSTER LANE, COLOMBO 10. ENVELOPE SHOULD BE MARKED WITH THE POSITION APPLIED FOR www.hayleys.com

# சனிப்பெயர்ச்சி 26.09.2009 முதல் 14.11.2011 வரை உங்களுக்கு எப்படி?

## இடபம்

(கார்த்திகை 2,3, 4ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1,2ஆம் பாதங்கள்)

வசீகரப் புன்னகையும் வார்த்தை ஜாலமும் கொண்ட இடப இராசி அன்பர்களே!

மனோகாரகனான சந்திரன் உங்கள் ராசியில் உச்சமாக இருப்பதால் மிகுந்த மனவு வறுதி உடையவராகவும், சிறந்த சிந்தனைத் திறன் கொண்டவராகவும் நீங்கள் விளங்குவீர்கள்.

ஏந்த விஷயத்தையும் அவ்வளவு எளிதில் விட்டுக்கொடுத்துவிட மாட்டீர்கள் .ஒரு விஷயத்தைக் கையில் எடுத்துக்கொண்டால் அதை நிறைவேற்றி முடிக்கும் வரை ஓய்ந்துவிட மாட்டீர்கள். நல்ல இரசனையுணர்வு உங்களுக்கு அமைந்திருக்கும். கலைகளில் அதிக ஆர்வம் செலுத்துவீர்கள்.

இடப ராசிக்காரர்களில் பலர் கலைஞர்களாகவும் படைப்பாளிகளாகவும் வலம் வருவதை நடைமுறையில் காணமுடிகிறது.

வசதி வாய்ப்புக்களுடன் ரம்மியமான சொகுசு வாழ்க்கை வாழவேண்டும் என்பதை இலட்சியமாகக் கொண்டிருப்பீர்கள் .அந்த இலட்சியத்தை உங்களில் பெரும்பாலானோர் அடைந்தும் விடுவார்கள்.

இவையெல்லாம் இடப ராசிகாரர்களின் பொதுத் தன்மைகள். இனி,சனிப்பெயர்ச்சியைப் பற்றிக் காண்போம்.

இது நாள் வரை அதாவது 26.09.2009 வரை உங்கள் ராசிக்கு நான்காம் இடமாகிய சுகஸ்தானத்தில் சனி பகவான் சஞ்சரித்துக் கொண்டிருந்தார். இதற்கு அர்த்தாஷ்டம சனி என்று பெயர். அந்த அர்த்தாஷ்டம சனி உங்களுக்கு அல்லல்கள் பலவற்றை அடுத்தடுத்துக் கொடுத்திருப்பார். தொல்லைகள் பலவற்றைத் தொடர்ந்து அளித்திருப்பார். சிக்கல்கள் சிலவற்றில் உங்களைச் சிக்க வைத்துப் பார்த்திருப்பார்.

இப்போது 5ஆம் இடத்திற்குச் சனி பிரவேசிக்கப்போகிறார்.

ஆசுவாசப் பெருமூச்சு ஒன்றை ஆனந்தமாக விட்டுக்கொள்ளுங்கள். ஸ்வாமி ! வீசுகின்ற காற்று இனி உங்கள் பக்கம்தான் .பேசுகின்ற பேச்சிலெல்லாம் இனி உங்கள் புகழ்தான்.

உள்ளத்தில் புதிய உற்சாகம் ஊற்றெடுக்கும். வெள்ளத்தைப் பிரிந்து மீனைப் போல் வெலவெலத்த நிலைமாறும். பள்ளத்தில் கிடப்போரெல்லாம் பையப் பைய மேல்வருவர்.

இல்லத்தில் புதிய இன்பத் தென்றல் வீசிடும். வெல்லத்து இனிப்பைப்போல் மிக இனிக்கும் இல்வாழ்க்கை!

போட்டி பொறாமைகளும்,புகைச்சல் எரிச்சல்களும், வாட்டிவதைத்த வ[illegible]ன் சூழ்ச் சிகளும்,காட்டிக் கொடுத்த கயவர்களின் திட் டங்களும் தவிடு [illegible]ாகும். தலை நிமிந்து நின்றிடுவீர்!

தாயாரின் உடல் நலத்தில் தகுந்த நல்ல மாற்றம் வரும். தாயாதி வர்க்கமெல்லாம் தயவுடனே உதவிடுவர். நோயோடு நொம்பலங்கள் நொடியினிலே தீர்ந்துவிடும்.

தீயாகத் தகித்திருந்த தீமைகளும்,பேயாக ஆட்டி வைத்த பிரச்சினைகளும், ஓயாமல் இருந்து வந்த உளைச்சல்களும் உங்களை விட்டு ஓடி விடும்.

பிள்ளைகளின் கல்வியிலே சொல்லிக் கொள்ளும் விதத்தில் நல்ல முன்னேற்றம் உண்டு. வெள்ளைமனம் கொண்ட நல்லோரின் ஆதரவும் ஆசிகளும் உள்ளபடி கிடைப்பதனால் உள்ளத்தில் மகிழ்ச்சி பெருகும்.

கழுத்தைப் பிடித்த கடன் தொல்லைகளும், அழுத்தி அமுக்கிய பணப் பற்றாக்குறைகளும், இழுத்துப் பிடித்த இன்ன பிற இன்னல்களும் விழுந்தடித்துக்கொண்டு ஓடிவிடும்! வியப்பான மாற்றம் வரும்.

இதோ 5ஆம் இடத்துச் சனி பகவான் செய்யும் அரும்பலன்களைப் பற்றிய பழைய ஜோதிடப் பாடல் ஒன்றைப்பாருங்கள்.

**பஞ்சம ஸ்தானம் தன்னில்**
**பாங்காகக் காரிவந்தால்**
**மிஞ்சிய துன்பமெல்லாம்**
**விலகிடும் மேன்மை யுண்டாம்**
**புஞ்சையில் நஞ்சை தன்னில்**
**பூரிப்பாய்ப் பலன்கள் கிட்டும்**
**கொஞ்சமும் ஐயம் வேண்டாம்**
**குணமுடன் வாழ்க்கை உண்டு**

உங்கள் ராசிக்குச் சனிபகவான் யோகதிபதி. அவர் தன் நட்பு ராசியாகிய கன்னி ராசியில் சஞ்சரிக்கப்போவதால் மிகப் பல நற்பலன் களை எதிர்பார்க்கலாம்.

**சனிபகவானின் வக்ர கால பலன்கள்:**

14.01.2010 இலிருந்து 31.05.2010 வரையிலும் 27.01.2011 இலிருந்து 13.06.2011 வரையிலும் சனிபகவான் வக்ர கதியில் சஞ்சாரத்தை மேற்கொள்வார்.

இக் காலகட்டங்களில் நாம் சனிபகவானிடமிருந்து நன்மைகளை எதிர்பார்க்க முடியாது. சிற்சில இன்னல்களைச் செய்தே தீருவார்.

ஜாதகப்படி நல்ல திசாபுத்தி நடக்குமேயானால் கவலைப்பட வேண்டியதில்லை. மோசமா்ன திசாப புத்தி நடக்குமானால் மிக மிக எச்சரிக்கயையாகச் செயல்பட வேண்டும்.

மற்றவர்களின் விஷயத்தில் தலையிடாதீர்கள் அறநெறிக்கு மாறான காரியங்களைப் பற்றிக் கனவிலும் கூடக்கருதாதிர்கள். ஒவ்வொரு வார்த்தையையும் யோசித்தே வெளிப்படுத்துங்கள்.

வயிற்றுப் பிரச்சினைகள் புத்திரர்களின் விஷயத்தில் சிக்கல் போன்றவை ஏற்படலாம். நிலம்,வீடு வாகனம் வாங்குவதில் சிற்சில போராட்டங்களைச் சந்திக்கவேண்டியிருக்கலாம்.

சனிக் கிழமைகளில் நவக்கிரக சந்நிதிக்குச் சென்று சனிபகவானைப் பிராத்தித்துக் கொண்டால் பிரச்சினைகளிலிருந்து விடுபடலாம்.

**மனிதரின் பாவ புண்யக்**
**கணக்கினை வகுத்துப் பார்த்தே**
**இனிமையைத் தீமை தன்னை**
**ஏற்பவே வழங்குகின்ற**
**சனிபக வானே! என்றன்**
**சஞ்சலம் நீக்கி காப்பாய்**
**முனிவரும் தேவர் தாமும்**
**மொழிந்திடும் கீர்த்தியோனே!**

என்னும் துதிப்பாடலைச் சமயம் கிடைக்கும் போதெல்லாம் சொல்லி வருவீர்களேயானால், சனி பகவானுக்குப் பிரீதி உண்டாகும்.



**குரு , ராகு கேதுக்கள் :**

சனிபகவான் உங்கள் ராசிக்கு 5ஆம் இடத்தில் சஞ்சரித்துக்கொண்டிருக்கும் காலகட்டத்தில் இடையே குரு ராகு கேதுக்களின் பெயர்ச்சிகளும் நடைபெறும். அவை நன்மை நல்குமா? எப்போது? என்று பார்ப்போம் வாருங்கள் சுவாமி!

4.05.2010 இலிருந்து 7.11.2010 வரையிலும்,21.11.2010 இலிருந்து 9.5.2011 வரையிலும் குரு பகவான் உங்கள் ராசிக்கு 11ஆம் இடத்தில் சஞ்சரிக்கிறார்.

இந்தக் காலகட்டம் உங்களுக்குப் பொன்னானதாக அமையும்.

புதிய திட்டங்கள் வெற்றி பெறும் தொழிலை விருத்தி செய்வீர்கள். வெளிநாட்டு யோகம் சிலருக்கு உண்டாகும். வீடு, நிலம், வாகனம் வாங்கும் யோகம் பலருக்குஉண்டு.

ராகு கேதுக்களைப் பொறுத்தவரையில் அவ்விரு கிரகங்களின் ஒத்துழைப்பு உங்களுக்கு இந்தக் காலகட்டத்தில் இல்லை. பரவாயில்லை.ஸ்வாமி ! சனி பகவானும் குருபகவானும் உங்களுக்கு அதிகமாக அள்ளித் தரும்போது ராகு கேதுக்கள் தராவிட்டால் என்ன குறைந்தா போய்விடும்? விட்டுத் தள்ளுங்கள்.

**தொழில் துறையினருக்கு :**

தொழிலை மிகப் பெரிய அளவில் விஸ்தரிக்க முடியும். அரசு சம்பந்தப்பட்ட அனைத்துக் காரியங்களும் தடையின்றி நிறைவேறும் தொழில் துறையில் உங்கள் வேரை அழமாக ஊன்றலாம். உங்கள் கொடியை உயரமாகப் பறக்கவிடலாம்.

**உத்தியோகஸ்தர்களுக்கு/ தொழிலாளர்களுக்கு**

சம்பள உயர்வு,பதவியுயர்வு,எதிர்பார்த்த சலுகைகள் ஆகிய அனைத்தும் குறைவின்றிக் கிட்டும். உங்கள் புகழ் உயரும் கௌரவம் மேம்படும் சனி பகவானின் வக்ர காலகட்டத்தில் உங்கள் கௌரவத்துக்குக் குறைவு உண்டாகும்படியான சில நிகழ்வுகள் நடைபெறலாம். கவனம் தேவை.

**கலைஞர்களுக்கு :**

கனவு பலித்துவிடும். கதவு திறந்துவிடும் ஏக்கங்கள் இனியில்லை. புகழ் மகள் பூமாலை தொடுத்து இதோ வந்துவிட்டாள் இனி உங்கள் காலம் ! உங்கள் கையில் வசப் படும் வானம் ! எண்ணற்ற வாய்ப்பு வரும் எதிர்பாரா அழைப்பு வரும். வண்ணத்தில் வாழ்க்கை மாறும் வரலாறு படைத்திடுவீர்.

**மாணவர்களுக்கு:**

ஊக்கத்தோடு உணர்ந்து படிப்பீர்கள் ஞாபக சக்தி அதிகரிக்கும் புத்துணர்வோடு புதுவேகத்துடனும் செயல்பட முடியும். பெற்றோரும் ஆசிரியரும் மெச்சும்படியாகச் சில மாணவர்கள் போட்டிகளில் வெற்றி பெற்றும் கல்வியில் முதலிடத்தைப் பிடித்தும் சாதனை புரிவார்கள் சில மாணவர்களுக்குப் படிக்கும் போதே வேலைக்கான உத்தரவாதம் கிடைக்க வாய்பிருக்கிறது.

**அரசியல்வாதிகளுக்கு:**

செல்வாக்கு உயரும் சொல்வாக்கு மேம்படும். அரசியலில். அடுத்த கட்ட வளர்ச்சி நிலையை அடைவீர்கள். பணபலமும் படைபலமும் பெருகும்.

**மக[illegible]ிருக்கு:**

வீட்டில் சுபகாரியங்கள் நடைபெற்று உங்களுக்குச் சந்தோஷத்தை ஏற்படுத்தும் குடும்ப வாழ்க்கை குதூகலம் மிக்கதாக இருக்கும். வேலைக்குச் செல்லும் பெண்களுக்கும் பல்வேறு முன்னேற்றங்கள் உண்டாகும். பட்டுப் புடவை பொன்னகைகள் வீட்டு அலங்காரப் பொருள்கள் என்று வாங்கி மகிழ்வீர்கள்.

**செ.தேவசேனாபதி**
**சோதிட நிபுணர்,வாஸ்து வல்லுநர்**

**நற்பலன்கள் அதிகரிக்க...**

5ஆம் இடத்துச் சனி பகவான் தீமை செய்வார் என்பதுதான் பொதுவான பலன் ஆனால் இந்தச் சனிபெயர்ச்சி உங்களுக்க நன்மை நல்குவதாகவே அமைந்திருக்கும்.

உங்கள் ஜெனன ஜாதகத்தின்படி நல்ல திசாபுத்தி நடைபெறுமானால் 80% அளவிற்கு நற்பலன்களைத் தாராளமாக எதிர்பார்க்கலாம். மோசமான திசாபுத்தி நடை பெறுமானால் அந்தந்தக் கிரகத்திற்குப் பரிகாரம் செய்து நற்பலன்களை அதிகரித்துக் கொள்ளுங்கள் முன்னே சொல்லப் பட்டிருக்கும் துதிப் பாடலை அடிக்கடிப் பாராயணம் பண்ணுங் கள் பலன் நிச்சயம் உண்டு.

(தொடரும்)

# இலங்கை -இந்திய கப்பல் சேவை விரைவில் ஆரம்பிக்க நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கைக்கும் இந்தியாவுக்கு மிடையிலான பயணிகள் கப்பல் சேவையை விரைவில் ஆரம்பிப்பதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளதாக இந்திய கப்பல் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சேவை தொடர்பான இறுதி அறிவுறுத்தலை மத்திய அரசாங்கத்திட மிருந்து தாம் எதிர்பார்ப்பதாக கொச்சின் துறைமுக ஆணைய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கொழும்புக்கும் தென்னிந்திய கொச்சின் துறைமுகத்திற்கும் இடையேயான இந்தச் சேவையினை ஆரம்பிப்பது குறித்து சார்க் நாடுகளின் போக்குவரத்து அமைச்சர்கள் கலந்துகொண்ட மாநாட்டிலும் ஆராயப்பட்டது.

இதனையடுத்தே தற்சமயம் இந்த சேவையை நடைமுறைப்படுத்தவதற்கான வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளதாக கொச்சின் துறைமுக ஆணையகம் தலைவர் என்.ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

கப்பலில் வரும் பயணிகளை எதிர்கொள்ள வதற்கான சகல வசதிகளையும் தரத்தையும் கொச்சின் துறைமுகம் கொண்டுள்ளதாகத் தெரிவித்த அவர் ஏற்கனவே பல வெளிநாட்டு சிறிய மற்றும் நடுத்தர பயணிகள் கப்பல்கள் இந்தத் துறைமுக்கதிற்கு வருகை தருவதாகவும் தெரிவித்தார்.

இந்தச் சேவையின் மூலம் இந்திய இலங்கை வர்த்தக சமூகங்கக்கிடையில் மேலும் நெருக்கமானதும் உறுதியானதுமான உறவுகளை மேம்படுத்த முடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(ந-5)

# சட்டவிரோதமாக பிரான்ஸ் செல்ல முற்பட்ட 6 இலங்கைத் தமிழர்கள் கைது

(கொழும்பு)

சட்ட விரோதமான முறையில் பிரான்சுக்கு செல்ல முற்பட்ட 6 இலங்கைத் தமிழர்கள் இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

போலிக்கடவுச்சீட்டு மற்றும் போலி விசாக்களைப் பயன்படுத்தி குறித்த இலங்கைத் தமிழர்கள் பிரான்ஸ் செல்ல முற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

கைதராபாத் விமான நிலையத்தில் வைத்து குறித்த இலங்கைத் தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட அனைவரும் யாழ்ப்பாணம் மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

இலங்கையில் இருந்து தமிழகத்திற்குச் சென்று போலியான ஆவணங்களைச் சமர்ப்பித்து பிரான்ஸ் செல்ல விசா பெற்றுக் கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நன்மையை செய்யுங்கள். யாருக்கு என்று மட்டும் கேட்காதீர்கள்.

-ஓர் அறிஞன்

வலம்புரி

## சமூகப்பணி செய்ய இந்து ஆலயங்கள் முன்வர வேண்டும்

க.பொ.த. சாதாரண தரத்தில் சைவசமயப் பாடத்தில் அதிவிசேட சித்திபெற்ற மாணவனால் தேவாரம் பாடமுடியவில்லை.

இந்து நாகரிகப் பாடத்தில் உயர்தரத்தில் அதி விசேட சித்திபெற்ற மாணவரால் நாயன்மார் களின் பெருமைகளைப் பேச முடியவில்லை.

அப்படியானால் எங்கள் கல்வியில் எங்கோ கோளாறு இருக்கின்றது.

கல்விக்கும் நடைமுறைக்கும் இடையே இருக் கக் கூடிய இடைவெளியே இந்த வேதனையான விளைவுகளுக்குக் காரணம். ஆனால் தேவால யங்களில் பிரார்த்தனை இடம் பெறுகின்ற போது எல்லோரும் சேர்ந்து அருட்பாடல்களை இசைக் கின்ற அற்புதம் கண்டு மனம் நெகிழாமல் இருக்க முடியாது.

இங்கு தான் இரண்டு சமயங்களின் வேறு பட்ட பங்கும் பணியும் வெளிப்படுகின்றன. அதா வது, கத்தோலிக்க தேவாலயங்கள் மக்கள் பணி செய்வதில் தங்களை அர்ப்பணித்துள்ளன.

தேவாலயங்களை இடித்துக்கட்டுவது, தெரு வில் வைக்கப்பட்டுள்ள திருச்சொரூபங்களுக்கு பேராலயம் கட்டுவது போன்ற வேலைகளில் அவர்கள் ஈடுபடுவது கிடையாது.

அவர்களின் பணி, ஏழை மக்களுக்கு உதவு தல், வீடில்லாதவருக்கு வீடுகட்டிக் கொடுத்தல், தொழிலில்லாத இளைஞர் யுவதிகளுக்கு தொழிற் பயிற்சி வழங்குதல், மருத்துவத் தேவை களுக்கு உதவுதல் என பல்வகையில் அருட்தந் தையர்கள், அருட்சகோதரிகள் உதவி புரிகின்ற னர்.

இதனால் தேவாலயத்தில் பற்றுதல், ஒவ் வொரு ஞாயிற்றுக்கிழமையும் பிரார்த்தனை யில் பற்கேற்பு, கிறிஸ்தவ கீதங்களை ஒன்று சேர்ந்து இராகத்துடன் இசைக்கும் பண்பு என் பன அங்கு காணப்படுகின்றன.

இதற்கு மேலாக மருத்துவச் சிகிச்சை நிலை யம், அரசசார்பற்ற அமைப்புகள், முதியோர் பரா மரிப்பு, பிரபல்யமான தனியார் பாடசாலைகளை நிர்வகித்தல் எனப் பன்முகப்பட்ட பணிகள் முன் னெடுக்கப்படுகின்றன.

இந்நிலையில் எமது இந்து ஆலயங்களின் சமூகப் பணிகள் எங்ஙனம் உள்ளதென்பதை ஒரு கணம் சிந்தித்தால், திருக்காளத்தியப்பனின் கண்களில் இருந்து சிந்திய குருதியே எம் கண் களில் இருந்தும் சிந்தும்.

எனவே குறைகளை மட்டும் கூறிக் கொள் வதை விடுத்து ஆற்ற வேண்டிய பணிகள் பற்றி சிந்தித்தால் நல்லூர் முருகன் ஆலயம், யாழ்ப் பாணத்தில் மருத்துவ பீடம் ஒன்றை நிறுவி மருத்துவக் கல்வியை மேற்கொள்வதற்கான வசதிவாய்ப்புகளை ஏற்படுத்தித்தரவேண்டும்.

குவிகின்ற அடியார்க்கெல்லாம் அமுதளிக் கும் நயினை நாகபூசணி அம்மன் ஆலயம் யாழ்ப்பாணத்தில் சகல வசதிகளையும் கொண்ட சிறுவர்களுக்கான வைத்தியசாலை ஒன்றை அமைத்து இலவசமான மருத்துவசேவையை மேற்கொள்ள வேண்டும்.

இதேபோல் வல்லிபுர ஆழ்வார் ஆலயம் ஈழத் தமிழினத்தின் வரலாற்று ஆவணங்களை சேக ரித்துக்காப்பாற்றும் பிரமாண்டமான மியூசியம் ஒன்றை நிர்மாணிக்கவேண்டும்.

இதுபோல் ஏனைய இந்து ஆலயங்களும் மக்கள் பணி-சமூக சேவை ஆற்ற முன்வருவது காலத்தின் கட்டாயமாகும்.

# சனல் 4 வீடியோக் காட்சி தொடர்பாக வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கு விளக்கம்

(கொழும்பு)

சனல் -4 வீடியோ காட்சிகள் குறித்து வெளிநாட்டுத் தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்களுக்கு தெளிவுபடுத்தும் நிகழ்வு நேற்று முன்தினம் இடர் முகாமைத்துவம் மற்றும் மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க தலைமை யில் இடம்பெற்றது.

ஜனாதிபதி செயலகத்தில் நடந்த இந்நிகழ்வில் வெளி விவகார செயலாளர் பாலித கோகர்ண சட்டத்தரணி முகான் பீரிஸ் சிரேஸ்ட விரிவுரையாளர் டாக்டர் சத்துரசில்வா மற்றும் உயர்மட்ட இராணுவ அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண் டனர்.

இந்த போலியான வீடியோக்காட்சி தொடர்பான வெளி நாட்டு தூதுவர்கள்உயர்ஸ்தானிகர்களுக்கு அமைச்சர்கள் விளக்கமளித்தார். இது குறித்து ஊடகவியலாளர்களுக்கு விளக் கம் அளிக்கும் வகையில் மாநாடொன்றையும் ஏற்கனவே அமைச்சர் நடத்தியிருந்தார்.

வீடியோக்கட்சிகள் தொடர்பாக ஜனாதிபதியின் விதப் புரைக்கமைய நான்கு கட்ட விசாரணைகள் நடத்தப்பட்ட தாகவும் அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்தார்.



வீடியோ காட்சிகள் பற்றி டாக்டர் சுனில் கே. வித்தாரண மொரட்டுவ பல்கலைக் கழகத்தின் தலைமை தொழில் நுட்ப விரிவுரை யாளர் சத்துர டிசில்வா சிரேஸ்ர சமிக்ஞைகள் அதி காரி பிரசாத் சமரசிங்க மேஜர் ஜெனரல் பி.ஏ பண்டார ஆகியோர் விசா ரணை நடத்தி அமைச்சரிடம் அறிக்கை ஒன்றை சமர்ப் பித்திருந்தனர். அந்த அறிக்கை மூலம் கிடைத்த தகவலின் படி இந்த வீடியோக் காட்சிகள் கேம்கோடர் மூலமாகவே ஒளிப் பதிவு செய்யப் பட்டவை என்றும் கையடக்கத் தொலைபேசி யில் அல்ல எனவும் போலியான ஒளிப்பதிவு நவீனதொழில் நுட்பத்தின் மூலம் பதிவாக்கப்பட்டதுஎனவும்அமைச்சு தரப்பில் கூறப் பட்டது . (ஓ-6)

# பெற்றோரை பிரிந்த இரு குழந்தைகள் வவுனியா சிறுவர் இல்லத்தில் ஒப்படைப்பு

(கொழும்பு)

பெற்றோரைப்பிரிந்த நிலையில் திருகோணமலை மாவட்டம் புல்மோட்டையைச் சேர்ந்த சகோதரிகளான இரண்டு குழந்தைகளை கெப்பிற்றி கொல்லாவ நீதிமன்றம் வவுனியா கோயிற்குளம், சிவன்கோயில் அருளகம் சிறுவர் இல்லத் திற்கு அனுப்பி வைத்துள்ளது.

தயாபரன் புகழரசி என்ற 4வயது சிறுமியும் தயாபரன் சாகலர்சி என்ற 2வயது குழந்தையுமே இவ்வாறு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக வவுனியா கோயில்குளம் சிவன் கோயில் அறங்காவலர் அவையின் செயலாளர் ஆறுமுகம் நவரட்ணராஜா தெரிவித்துள்ளார்.

தமது சிறுவர்இல்லத்தில் பராமரிக்கப்பட்டு வருகின்ற இந்த குழந்தைகளின் பெற்றோர் அல்லது இரத்த உறவி னர்கள் இருந்தால் ஆலய நிர்வாகத்திடம் தொடர்பு கொள்ளு மாறு சிவன் கோயில் அறங்காவலர் அவையின் செயலாளர் கோரியுள்ளார்.

புல்மோட்டை இடைத்தங்கல்முகாமில் தங்கியிருந்த இவர்களை இனம் கண்ட சிறுவர் பராமரிப்பு அதிகாரிகள் இவர்கள் தொடர்பாக கெப்பிட்டிகொல்லாவ நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வந்தனர். இதை யடுத்தே நீதிமன்றம் இவர்கள் இருவரையும்வவுனியா கோயில்குளம் அருளகம் சிறுவர் இல்லத்திற்கு அனுப்பி வைத்துள்ளது. (ஓ-6)

# ஓடிப்போ டெங்கு ஒழிப்பு இறுவட்டு வெளியீட்டு விழா

சுழிபுரம் வலிமேற்கு பிரதேச சபையினால் ஜே.டி சி.எஸ் .ஐ-எல். எம் .ஐ என்னும் திட்டத்தின் மூலம் பாண்டவெட்டை காட்டுப்புலம் பிள்ளைகளின் காவேரி கலாமன்றத்தினால் உருவாக்கப்பட்டுவண.ரி. எஸ். ஜோசுவா அடிகளால் நெறியாள் கை செய்யப்பட்ட ***ஓடிப்போ*** டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு இறுவட்டு வெளியீட்டுவிழா இன்று வியாழக்கிழமை பி.ப 3மணிக்கு திருவடி நிலை காட்டுப்புலம் கிராம அபிவிருத்தி சபை வளாகத் தில்வலிமேற்குபிரதேச சபைச் செயலாளர் சு .புத்திசி காமணி தலைமையில்நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தெற்காசிய பிராந்திய ரி. எல்.எம்.ஐ நிறுவன இயக்குனர் கலாநிதி ஜெயக்குமார் டானியல் கலந்து கொண்டு உரை நிகழ்த்தவுள்ளார்.

சிறப்புரைகளை வட்டுக்கோட்டை பொது சுகாதார பரிசோதகர் சோ. ரூபதாஸ் , வலி மேற்கு பிரதேச சபை நிர்வாக உத்தியோகத்தர் க. பாலசுப்பிரமணியம் ,சுழிபுரம்பொது நூலக நூலகர் நா. அருணகிரிநாதர் ஆகியோர்வழங்கவுள்ளனர். தொடர்ந்து இறுவெட்டு வெளியீட்டுரையை அருட்பணி வண ரி. எஸ். ஜோசுவா அடிகளார் நிகழ்த்தவுள்ளார்.

அத்துடன் டெங்கு ஒழிப்பு தெருக்கூத்து நெறியாள்கைசெய்த வண ரி.எஸ் .ஜோசுவாஅடிகளார் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கும் நிகழ்வும்இடம்பெறவுள்ளது. (ஓ-9)

# இலங்கையர்களின் ஆயுட் காலம் 2025 இல் 10 வருடங்களால் அதிகரிக்கும்

## சமூக சேவைகள் அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையர்களின் ஆயுட்காலம் 2025 ஆம் ஆண்டா கும் போது 10 வருடங்களால் அதிகரிக்குமென சமூக சேவை கள் மற்றும் சமூக நலன்புரி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய தற்போது 70 வருடங்களாக உள்ள ஆண் ஒருவரின் ஆயுட்காலம் 2025 ஆம் ஆண்டளவில் 80 ஆக உயர்வடையும் எனவும் பெண்களின் தற்போதைய ஆயுட் காலம் 76 ஆக உள்ளதுடன் அது 2025 ஆம் ஆண்டளவில் 86 ஆக உயர்வடையலாம் எனவும் சமூகசேவைகள் மற்றும் சமூக நலன்புரி அமைச்சின் பிரதியமைச்சர் லயனல் பிரேம சிறி தெரிவித்துள்ளார்.

அத்துடன் நாட்டின் மூத்தபிரஜைகளின் பொருளாதார சமூக மற்றும் கலாசாரப் பின்னணிகளை மேம்படுத்துவதற் காக விசேட செயற்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தவுள்ள தாகவும் பிரதி அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (ஓ-4)

# மனிதரில் இறைவனைக் காணுங்கள் -பகவான் பாபா

பகவான் அருள்கிறார் நீங்கள் சாதாரண மனிதரல்ல. நீங் கள் இறைவனே. இறைவனை நீங்கள் தேட வேண்டிய அவசி யமே இல்லை. நீங்கள் எங்கு பார்த்தாலும் இறைவன் இருக் கிறார். பார்க்கும் ஒவ்வொரு வகைப் பொருட்களிலும் கூட உறைவது அவரே உங்கள் அறியாமையினாலேயே நீங்கள் நான் என்ற வேறுபாடுகளுக்கு இடமளிக்கின்றீர்கள் . நீங்கள் ஒரு தனிப்பட்டவர் அல்ல. நானே நான் நான் சத்திய சாயி பாபா அல்ல அது என் உடலுக்கு வழங்கப்பட்ட பெயர் . இந்த உடல் பெற்றோர்கள் உங்களுக்கு அளித்த பரிசாகும். இவ் வுடல் பஞ்ச பூதங்கள் பஞ்சேந்திரியங்கள். மற்றும் பஞ்சப் பிராணன்களால் ஆனது . அவை ஒவ்வொருவரின் உள்ளும் ஒரே விதமாகவே உள்ளது . ஆகவே எவரும் மற்றவரிடமிருந்து மாறுபட்டவர் அல்லர் . இத் தத்துவத்தை உணராதவர்கள் அறி யாமை எனும் கடலில் சிக்கி மாயையில் உழல்கின்றனர்.

இவ்வுலகில் உள்ள ஒவ்வொன்றும் விளைவு பிரதிபலிப்பு மற்றும் எதிரொலியே ஒருவர் பேசும் போது அப்பேச்சை எமது காதுகளினால் கேட்டுக்கொண்டிருக்கின்றோம் என எண்ணு கின்றோம். ஆனால் அது அவ்வாறல்ல புலன்கள் அனைத் தும் உண்மையில் அலங்காரங்களைப் போன்றதே எம்முள் ஆதாரமான வாழ்க்கைத் தத்துவம். இல்லையெனில் அவைக ளால் தன்னிச்சையாக செயற்பட முடியாது.

இறைவனைத் தேட வேண்டிய அவசியமே இல்லை இறை வன் எம்முள்ளே இருக்கின்றார் என நம்பிக்கை கொள்ளல் வேண்டும். இந் நம்பிக்கையை வளர்க்கும் போது எம் மனதில் அன்பு வளர்கின்றது. அன்பிலி ருந்து அமைதி எழுகின்றது. அமைதி சத்யத்தினை பெற்றுத்தரு கிறது இந்த சத்தியமே இறைவன் . சத்தியம் தனித்து இருக்க வில்லை அதனை தேட வேண்டிய அவசிய மும் இல்லை. சத்யத்திற்கு உருவ மும் இல்லை சத்தியம் சத்தியமே. அமைதியை உருவாக்கியது யார்?



அமைதி அமைதியே அதற்கும் கூட உருவம் இல்லை. அன்பும் அன்பே அதுவும் எவருடைய படைப்பினாலும் பிறந்தது அல்ல. அன்பே கடவுள் அன்பிலே வாழ் வோம். இவை யாவும் எம்முள் ளேயே உருக்கொண்டுள்ளது. எம்மில் நாமே இறை வனைக் காண்போம்.

ஜெய்சாயிராம்

யாதவன்

## —— தென் அமெரிக்காவில் கடும் புயல் 14பேர் பலி ; நூற்றுக்கும் மேற்பட்டோர் காயம்

(ஆஜென்டீனா )

தென்னமரிக்காவில் உள்ள கடல் பகுதியில் காற்றமுத்த தாழ்வு மண்டலம் ஏற்பட்டது. இது கடும் புயலாக மாறியது. இதனால் ஆஜன்ரீனா ,பிரேசில் மற்றும் பராகுவே நாடுகளில் பலத்த மழை பெய்து வருகிறது.

அங்கு வீசும் சூறாவளிக்காற்று மற்றும் மழை வெள்ளத்திற்கு இது வரை 14 பேர் பலியாகியுள்ளனர்.

100- க்கு மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். ஆஜன்ரீனாவில் 10 பேர் பலியாகி யுள்ளனர். 50-க்கு மேற்பட்டோர் காய மடைந்துள்ளனர். பிரேசில் நாட்டில் குரே ஷியாபா நகரில் 4பேரும் சாபாலோ நகரில் இருவரும் பலியாகியுள்ளனர். இது பற்றிய அதிகார பூர்வ தகவல் வெளியிடப்படவில்லை. பராகுவே நாட்டில் கடும் புயல் விசுகிறது. இதற்கு டொர்னாடே என பெயரிடப்பட்டுள்ளது.

அஜென்ரினாவில் தான் கடும்சேதம் ஏற்பட்டுள்ளது. அங்குள்ள சாந்தா , றோசா , தொகுனா போசா சுல்சான் பெட்டோ உள்ளிட்ட நகரங்கள் கடுமையாக பாதிப்புக்குள்ளாகியுள்ளது. பிரேசின் நாட்டின் சான் பலோ நகரிலும் அதைச்சுற்றியுள்ள பகுதிகளிலும் தொலைபேசி தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளது.

பராகுவேயில் 700-க்கும் மேற்பட்டோர் தங்கள் சொத்துக்களை இழந்துள்ளனர். (ஓ-6)

## அமெரிக்க அரசுக்கு நெருக்கடி கொடுக்கும் மன்மோகன்சிங்கின் மகள்

(வோஷிங்டன்)



ஆப்கானிஸ்தான் மற்றும் ஈராக்கில் பிடி பட்ட சிறைக் கைதிகளைக் கொடுமைப்படுத்தியது தொடர்பான இரகசிய ஆவணங்களை பிரதமர் மன்மோகன்சிங்கின் மகள் அம்ரீத் சிங் அமெரிக்க நீதிமன்றத்தில் வாதாடி பெற்றுள்ளார்.

ஆப்கானிஸ்தானில் கைது செய்யப்பட்ட கைதிகள் குவான்டனாமோ சிறையிலும் ஈராக்கில் கைது செய்யப்பட்ட கைதிகள் அபு கிரேய்ப் சிறையிலும் அடைக்கப்பட்டு அமெரிக்கா இராணுவத்தினரால் பல்வேறு சித்திரவதைக்கு ஆளாக்கப்பட்டனர்.

இது தொடர்பாக அமெரிக்க புலனாய்வு நிறு வனங்களான எப்.பி.ஐ, சி.ஐ.ஏ போன்றவை பதிவு செய்த ஆவணங்கள் மற்றும் வீடியோ ஆதாரங்களை ஒப்படைக்கும் படி அமெரிக்க மனித உரிமை இயக்கம் நீண்ட நாட்களாக கோரி வந்தது.

கியூபா நாட்டுக்கு அருகே உள்ள குவான்டனாமோ சிறை மற்றும் அபு கிரெய்ப் சிறையில் கைதிகள் கொடுமைப்படுத்தப்பட்ட அனைத்து விவரங்களையும் அளிக்கும்படி அமெரிக்க அரசுக்கு உத்தரவிடக் கோரி ஏ.சி.எல்.யூ இயக்கத்தில் உள்ள அமெரிக்க சட்டத்தரணியான மன்மோகன் சிங்கின் மகள் அம்ரீத் சிங் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். சிறைக் கைதிகளுக்கு நேர்ந்த கொடுமை, காவலில் இறந்த கைதிகளின் பிரேத பரிசோதனை அறிக்கை அனைத்தையும் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் அளிக்க வேண்டும் என ஏ.சி. எல்.யூ. நீண்ட நாட்களாக கோரி வந்தது.

இந்த அமைப்பின் சார்பில் அம்ரீத் சிங்கும், கனடா நாட்டைச் சேர்ந்த ஜமீல் ஜாபரும் நீதி மன்றத்தில் வாதாடி ஒரு இலட்சத்து 30 ஆயிரம் பக்கங்கள் கொண்ட இரகசிய ஆவணங்களை பெற்றுள்ளனர். இந்த ஆவணங்களை அரசிடமிருந்து போராடி பெறுவதற்கு ஒன்பது கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. இந்த தொகையை அரசிடமிருந்து பெறவும் இந்த அமைப்பு திட்டமிட்டுள்ளது.

இதற்கிடையியே இரண்டு கைதிகளை கொடுமைப்படுத்தியது தொடர்பான வீடியோ, ஆதாரங்களை எரித்து விட்டதாக சி.ஐ.ஏ.தெரிவித்துள்ளதுஇது நீதிமன்ற அவமதிப்பு செயலாகும் எனக் கூறும் அம் ரீத் சிங் இன்னும் வெளியிடப்படாத ஆவணங்களையும் ஒப் படைக்கும் படி கூறி வாதாடி வருகிறார். அமெரிக்கரை திருமணம் செய்து கொண்டுள்ள அம்ரீத் சிங் (40) யேல் பல்கலைக்கழகத்தில் சட்டம் படித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

## அணுசக்தி உற்பத்தி விவகாரம் ; ஈரான் அதிபர் நிஜாத் கண்டிப்பு

(டெக்ரான்)

அணுசக்தியை உற்பத்தி செய்வது ஈரானின் தார்மீக உரிமை. இந்த உரிமையை நாங்கள் விட்டுக்கொடுக்க தயாரில்லை என ஈரான் அதிபர் அகமட் நிஜாத் தெரிவித்துள்ளார்.

ஈரான் அணு ஆயுதம் தயாரித்து வருவதாக அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் அஞ்சுகின்றன.

ஈரான் அணு ஆயுதம் தயாரிப்பதை கேள்விப்பட்ட மேற்கத்தேய நாடுகள் அந் நாட்டின் மீது கடந்த 2006ஆம் ஆண்டு முதல் பொருளாதாரத்தடை விதித்துள்ளன.

ஈரான் அணு ஆயுத தயாரிப்பை நிறுத்திக் கொண்டால் அந் நாட்டின் மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத்தடையை விலக்கிக் கொள்வது குறித்து பரிசீலிப்போம். இல்லாவிட்டால் ஈரான் கடுமையான விளைவுகளை சந்திக்க வேண்டியிருக்கும் என அமெரிக்க அதிபர் ஒபாமா எச்சரித்திருந்தார்.

இது குறித்து ஈரான் அதிபர் அகமட் நிஜாத் கூறியதாவது,

அணு சக்தி உற்பத்தி என்பது ஈரானின் தார் மீக உரிமை. இந்த உரிமையை விட்டுக் கொடுக்க நாங்கள் தயாராக இல்லை. அமைதிப் பணிக்குத் தான் அணு சக்தியை ஈரான் பயன்படுத்துகிறது.

மேற்கத்தேய நாடுகள் பயப்படுவது போல் நாங்கள் அணு ஆயுதம் எதையும் தாயரிக்கவில்லை.அணு ஆயுத பரவல் தடை , அமைதிப் பணிக்கு அணு சக்தி என்ற விஷயத்தில் மற்ற நாடுகளுடன் ஒத்துழைக்கத் தயாராக இருக்கின்றோம்.

இந்த மாத இறுதியில் ஐ.நா. பொதுச் சபையில் பேச வரும் போது அமெரிக்க அதிபர் ஒபாமாவுடன் ஒரே மேடையில் விவாதிக்க தயாராக இருக்கின்றேன் என்றார். (ஓ-6)

## பாகிஸ்தானில் பாடசாலைக்குச் சென்ற மாணவர்களை சுட்டுகொன்ற தலிபான்கள்

(பெஷாவர்)

பாகிஸ்தானில் தலிபான் தீவிரவாதிகள் ஆதிக்கம் உள்ள ஏராக்சி என்ற இடத்தில் நேற்று முன்தினம் காலை மாணவர்கள் அங்குள்ள உயர்நிலை பள்ளிக்கு சென்று கொண்டிருந்தனர்.

அப்போது தலிபான் தீவிரவாதிகள் அந்த மாணவர்களை நோக்கி சரமாரியாக சுட்டனர். இதில் 4 மாணவர்கள் குண்டு பாய்ந்து அந்த இடத்திலேயே உயிரிழந்தனர். 7 பேர் படு காயம் அடைந்தனர்.

கொல்லப்பட்ட மாணவர்கள் அனைவரும் ஷியா முஸ்லிம் இனத்தைச் சேர்ந்தவர்கள். தலிபான் தீவிரவாதிகள் ஷன்னி இனத்தைச் சேர்ந்தவர்கள். இரு இனத்தினருக்கும் இடையே அடிக்கடி மோதல் நடப்பது உண்டு. இதனால்தான் மாணவர்கள் மீது தாக்குதல் நடந்ததாக தெரியவந்துள்ளது.

மேலும் தலிபான் தீவிரவாதிகள் பள்ளிக் கூடங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து அவற்றை வெடிகுண்டு வைத்து தகர்த்து வருகின்றனர். இதனாலும் மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தி இருக்கலாம் என கருதப்படுகிறது. (ஓ-6)




## செவ்வாய் கிரகத்தில் அமெரிக்கா ஆய்வு விஞ்ஞானிகளை அனுப்ப ஏற்பாடு

(கேப்கார்னவல்)

செவ்வாய்க்கிரகத்தில் ஆய்வு செய்வதற்காக விஞ்ஞானிகளை அனுப்ப அமெரிக்கா ஏற்பாடு செய்து வருகிறது.

அமெரிக்காவின் நாசா நிறுவனம் எதிர்வரும் 2020ஆம் ஆண்டு நிலவுக்கு மீண்டும் விஞ்ஞானிகளை அனுப்ப திட்டமிட்டுள்ளது.

அதற்காக 770 கோடிடொலர் செலவிட்டுள்ளது. மேலும்4000 கோடிடொலர் செலவில் புதிய றொக்கெட் , விண்வெளி ஆய்வுக் குழு வீரர்கள் மற்றும் நிலவில் ஒரு ஆய்வு மையம்அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கான திட்டம் முடியும் தறுவாயில் செவ்வாய்கிரகத்தில் ஆய்வு நடத்த நாசா திட்டமிட்டுள்ளது. அதற்கான 30 வருட தொழில் நுட்பங்கள் குறித்து ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. (ஓ-6)

## காபூல் விமான தளத்தில் தற்கொலைத் தாக்குதல்

(காபூல்)

ஆப்கானிஸ்தானின் தலைநகர் காபூலில் உள்ள விமான தளத்தில் நேட்டோ இராணுவ தளம் உள்ளது .இந்த இராணுவ தளத்துக்கு வெளியே தற்கொலை தாக்குதல் தீவிரவாதி ஒருவர் காரில் அந்த இடத்துக்கு சென்றார். அவர் தன் காரில் இருந்த வெடிகுண்டுகளை வெடிக்கச் செய்ததில் 2 அப்பாவிகள் பலியானார்கள். 6பேர் காயம் அடைந்தனர் .

காயம் அடைந்தவர்களில் இருவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. இந்த தாக்குதலுக்கு தலிபான் இயக்கம் பொறுப்பு ஏற்றுக் கொண்டு உள்ளது. தலிபான் செய்தி தொடர்பாளர் ஜபினுல்லா முஜாஹித் கைத் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு இந்த தகவலை தெரிவித்தார்.(ஓ-6)

## ஏமன் நாட்டில் அமெரிக்க தூதரகத்தை தகர்க்க முயற்சி

(சனா)

ஏமன் நாட்டில் சனா நகரில் உள்ள அமெ



ரிக்க தூதரகத்தை வெடிகுண்டு மூலம் தகர்க்க நடந்த சதி நேற்று முன்தினம் முறியடிக்கப்பட்டது. தூதரகம் அருகே 2 வாகனங்களில் 4 மர்ம நபர்கள் சந்தேகப் படும் படி இருந்தனர் . அவர்களை பிடித்து சோதனையிட்ட பொலிஸார் .

அவர்களிடம் இருந்த வெடி பொருட்கள் துப்பாக்கிகள் போன்ற ஆயுதங்கள் போன்றவற்றை மீட்டு அவர்களை கைது செய்தனர் . இவர்களுக்கு 20 வயது முதல் 33 வயது இருக்கும் எனவும் அல்கொய்தா தீவிரவாத இயக்கத்தை சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது. பொலிஸார் தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார். சரியான நேரத்தில் இவர்கள் கைது செய்யப்பட்டதால் அமெரிக்க தூதரகத்தை தகர்க்க நடந்த சதி முறியடிக்கப்பட்டது. (ஓ-6)

## —— உறவுகளின் உயிர் காக்க —— செ.ப் 27 இல் அணி திரளுங்கள்

### ஜேர்மனியில் தமிழ் எழுச்சிக்குழு அழைப்பு

முட்கம்பி வேலிக்குள் அடைபட்டு இருக்கும் எமது உறவுகளின் உயிர் காக்க அணி திரளுமாறு ஜேர்மனி தமிழ் மக்கள் எழுச்சிக் குழு அழைப்பு விடுத்திருக்கின்றது.

ஜேர்மனியில் உள்ள டுசில்டோன் நாடாளுமன்றம் முன்பாக எதிர்வரும் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப.11 மணியளவில் முட்கம்பி வேலித் தடைகளை உடைப்போம் என்னும் தலைப்பில் நடைபெறவிருக்கின்ற நிகழ்விற்கே தமிழ் மக்கள் எழுச்சிக்குழு அழைப்பு விடுத்துள்ளது.

இந்நிகழ்வில் தமிழ் நாட்டைச் சேர்ந்த தமிழ் இன உணர்வாளர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிறப்பு அதிதிகளாக கலந்து கொள்கின்றனர்.

நிகழ்வு நடைபெறும் நாளில் ஜேர்மனியில் அரச தலைவர் தேர்தல் நடை பெறுவதால் முன்கூட்டியே வாக்களித்துவிட்டு நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு தமிழ் மக்கள் எழுச்சிக் குழு வேண்டுகோள் விடுத்துள்ளது. (ந-5)

# சம்பியன்ஸ் லீக் இருபது-20 அணிகள் பட்டியல் அறிவிப்பு

(மும்பை)

சம்பியன்ஸ் லீக் இருபது-20 தொடரில் பங்கேற்கும் 12 அணிகளின் பட்டியல் நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது.

உள்நாட்டு இருபது-20 சம்பியன்கள் பங்கேற்கும் முதல் சம் பியன்ஸ் லீக் இருபது-20 தொடர் இந்தியாவில் ஒக்டோபர் 8ஆம் திகதி முதல் 23 வரை நடக்கவுள்ளது.

போட்டிகள் டில்லி, ஐதராபாத் மற்றும் பெங்களூர் ஆகிய இடங்களில் நடக்கவுள்ளன இத்தொடரில் ஐதராபாத் டெக்கான் சார்ஜர்ஸ் (இந்தியா), பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் (இந்தியா), டில்லி டேர் டேவில்ஸ் (இந்தியா), நியூ சவுத் வேல்ஸ் புளூ (அவுஸ்திரேலியா), விக்டோரியா பஸ்ரேஞ்சர்ஸ் (அவுஸ்திரேலியா), கேப்கோப்ராஸ் (தென்னாபிரிக்கா), டைமண்ட் ஈகல்ஸ் (தென்னாபிரிக்கா), ஓடாகோ வோல்ட்ஸ் (நியூசிலாந்து), டிரினிடாட் அன்டடுபாகோ (மேற்கிந்தியதீவு), வேயம்பா (இலங்கை), சக்சஸ் சார்க்ஸ் (இங்கிலாந்து) மற்றும் சோமர்செட் சொப்ராஸ் (இங்கிலாந்து) ஆகிய 12 அணிகள் பங்கேற்கின்றன.

அணிகளில் பங்கேற்கும் வீரர்களின் பட்டியல் நேற்று முன்தினம் மும்பையில் வெளியிடப்பட்டது. தோள்பட்டை காயத்தால் அவதிப்பட்டு வரும் சேவாக் சம்பியன்ஸ் லீக் தொடரில் பங்கேற்கவுள்ளார்.

இவர் டில்லி டேர் டேவில்ஸ் அணியின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்திய தரப்பில் பங்கேற்கும் மற்ற அணிகளான பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணிக்கு அனில் கும்ளேயும், டெக்கான் சார்ஜர்ஸ் அணிக்கு கில்கிறிஸ்ட் அணித்தலைவராக தேர்வாகி உள்ளனர்.

சம் பியன்ஸ் லீக் இருபது-20 இல் பங்கேற்கும் இந்திய அணிகள் வருமாறு;

**டெக்கான் சார்ஜர்ஸ்**

கில்கிறிஸ் (அணித்தலைவர்), அசார் பிலாகியா, விஜய்குமார், வேணு கோபால்ராவ், வாஸ், சைமண்டஸ், சுமன், ஸ்ரைரிஸ், ஆர்.பி.சிங், சோயப் அகமட் எட்வோர்ட்ஸ், ரியான் ஹரிஸ், லக்ஸ்மன், பிரக்யான் ஓஜா மற்றும் ரோகித் சர்மா.

**பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ்**

அனில் கும்ளே (அணித்தலைவர்) ராகுல் டிராவிட, அகில், மேர்வி, உத்தப்பா, ரோஸ்ரெய்லர், ரைடர், ஸ்ரைன், மனிஷ் பாண்டே, பிரவீண் குமார், விராத் கோலி, கலிஸ், மார்க் பவுச்சர் மற்றும் வினய் குமார்,

**டில்லி டேர் டேவில்ஸ்**

சேவாக் (அணித்தலைவர்), காம்பீர், டில்ஷான், டிவில்லியர்ஸ், ரஜத் பாட்டியா, ஓவேஸ் ஷா, சங்வான், சால்வி, நெஹறா, நான்ஸ், அமித் மிஸ்ரா, மன்ஹறாஸ், தினேஷ் கார்த்திக், கோலிங்வூட் மற்றும் விக்டோரி.

# அமெரிக்க ஓபன் டென்னிஸில் காலிறுதிக்கு முன்னேறினார் பெடரர்

(நியூயோர்க்)

அமெரிக்க ஓபன் காலிறுதிக்கு முன்னேறினார் உலகின் நம்பர்-1 வீரரான சுவிட் சர்லாந்தின் ரோஜர் பெடரர்.

பெண்கள் பிரிவில் முன்னணி நட்சத்திரங்களை வீழ்த்திய அமெரிக்காவின் மெலானி ஓடினின் வெற்றிநடை தொடர்கிறது.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் கிராண்ட்ஸ்லாம் தொடரான அமெரிக்க ஓபன் டென்னிஸ் நடக்கிறது. ஆண்கள் ஒற்றையர் 4ஆவது சுற்றில் ரோஜர் பெடரர், ஸ்பெயினின் டாமி ராபிட்டோ வை சந்தித்தார்.

இதில் 7-5,6-2,6-2 என்ற நேர்செட்டில் பெடரர் வெற்றி பெற்று காலிறு திக்கு முன்னேறினார்.

மற்றொரு போட்டியில் செர்பியாவின் டோகோவிச் ,செக்குடியரசின் ஸ்டீபனக்கை 6-1, 6-3, 6-3 என்ற நேர்செட்களில் வீழ்த்தி காலி றுதிக்குள் நுழைந்தார். பிறபோட்டிகளில் சுவீடனின் ராபின் சோடர் லிங், ஸ்பெயினின் வெர்டாஸ்கோ காலிறுதிக்கு தகுதி பெற்றுள்ளனர்.


**காலிறுதியில் ஓடின்**

இந்தத் தொடரில் ஆரம்பத்திலிருந்தே அனைத்து முன்னணி வீராங்கனைகளுக்கும் அதிர்ச்சி கொடுத்து வருகிறார் அமெரிக்காவின் இளம் வீராங்கனை மெலனியே ஓடின் தரவரிசையில் 70ஆவது இடத்தில் இருக் கும் ஓடின் தனது 2ஆவது சுற்றில் தரவரிசையில் 4ஆவது இடத்தில் உள்ள ரஷ்யாவின் டெமன்டிவாவை வீழ்த்தினார்.

3 ஆவது சுற்றில் மற்றொரு முன்ன ணி வீராங்கனை ஷரபோவாவை வெளி யேற்றினார். இதையடுத்து 4ஆவது சுற்றில் 13ஆவது இடத்தில் உள்ள ரஷ்யாவின் நாடியா பெட்ரோவாவை எதிர் கொண்டார். இதன் முதல் செட்டை1-6 என ஓடின் இழந் தார். அடுத்த செட்டில் எழுச்சி கண்ட இவர் டை பிரேக்கரில் 7-6 என வென்றார்.

அதே வேகத்தில் 3ஆவது செட்டிலும் அசத்திய ஓடின் 6-3 என வென்றார். இதையடுத்து 1-6,7-6,6-3 என்ற செட்கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறினார்.

பிற போட்டிகளில் டென்மார்க்கின் கரோலின் வோஸ்னியாக்கி, பெல்ஜியத்தின் விக்மேயர், உக்ரைனின் காட்ர்யனா ஆகியோர் வென்று காலிறுதிக்குள் நுழைந்துள்ளனர்.



வடக்குமாகாண பொதுச்சேவையில் சமூக சேவை உத்தியோகத்தர், கலாசார உத்தியோகத்தர், கிராம அபிவிருத்தி உத்தியோகத் தர் மற்றும் நன்னடத்தை உத்தியோகத்தர் ஆகிய பதவிகளுக்கு 30 பேருக்கு நேற்று வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி நியமனக்கடிதங்களை வழங் கிவைத்தார். இந்நிகழ்வில் உத்தியோகத்தர் ஒருவருக்கு வடக்கு மாகாண ஆளுநர் நியமனக் கடிதத்தை வழங்கு வதையும் அருகில் வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் இராசநாயகம், சுகாதார அமைச்சின் செயலாளர் எஸ்.ரவீந்திரன், கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் ஆகியோர் நிற்பதையும் படங்களில் காணலாம்.

# முகாம்களிலுள்ள்வர்களை பொறுப்பேற்பதற்கான விண்ணப்பங்களை ஆங்கிலத்தில் பூரணப்படுத்துக அரச அதிபர் ஆலோசனை

(யாழ்ப்பாணம்)

வவுனியா, யாழ்ப்பாணம் நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளவர் களை உறவினர்கள்; நண்பர்கள் பொறுப்பேற்பதற்காக சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப் படிவங்களை ஆங்கிலத்தில் பூரணப்படுத்துமாறு யாழ். அரச அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார்.

இதற்கமைய ஆங்கில மொழியிலான விண்ணப்பப்படிவங்களை அந்தந்த பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பணி பணிமைகளில் நாளை முதல் இலவசமாகப் பெற்றுக் கொள்ள முடியுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் யாழ். அரச அதிபர் க.கணேஷ் மேலும் தகவல் தருகையில்;

வவுனியா, யாழ்ப்பாணம் நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களை உறவினர்கள் அல்லது நண்பர்கள் பொறுப்பேற்றுக் கொள்ளாமென அரசாங்கம் அறிவித்திருந்தது.

இந்நிலையில் வவுனியா, யாழ்ப்பாணம் நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களைப் பொறுப்பேற்பதற்காக யாழ்ப்பாணத்தில் பலர் 20 ரூபா கட்டணம் செலுத்தி விண்ணப்ப படிவங்களை தனியார் வர்த்தக நிலையங்களில் பெற்றுக்கொள்கின்றனர்.

அத்துடன் இவ் விண்ணப் படிவங்கள் தமிழில் பூரணப்படுத்தப்படுவதால் பொலிஸ், இராணுவ அனுமதிக்கு அனுப்பப்படும் போது மொழிபெயர்ப்புக் காரணமாக தாமதம் ஏற்படலாம்.

இதனாலேயே ஆங்கிலத்தில் விண் ணப்பப் படிவங்களை பூரணப்படுத்தினால் விரைவில் பொலிஸ், இராணுவ அனுமதிகளைப் பெற்று நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களை விரைவில் விடுக்க முடியும் என யாழ். அரச அதிபர் தெரிவித்தார். (ந-5)

# கேள்வி கோரல்

யாழ்ப்பாணம் மாநகரசபை முதல்வர் மகாநாட்டு மண்டபத்தில் அலுமினியம் பிரிவிடுதல் (Aluminium partition) செய்து அலுமினியம் கதவு வழங்கி பொருத்துவதற்கு தகுதியான ICTAD பதிவுள்ள ஒப்பந்ததாரர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

01. கேள்விப்பத்திரங்கள் 2009.09.11-ம் திகதி முதல் 2009.09.16-ம் திகதி நண்பகல் 12.00 மணி வரை வழங்கப்படும்.
02. கேள்விப்பத்திரங்கள் 2009.09.18-ம் திகதி நண்பகல் 12.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.
03. கேள்விகள் யாவும் 2009.09.18-ம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு திறந்து பரிசீலிக்கப்படும். அச்சமயம் கேள்வி சமர்ப்பித்தவர்களோ அல்லது அவர்களின் பிரதிநிதிகளோ சமுகமளிக்கலாம்.
04. பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்கள் கடித உறையிலிட்டு அரக்கு முத்திரையிட்டு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் அலுமினியம் பிரிவிடுதல் (Aluminium partition) வேலைக்கான கேள்வி அறிவித்தல் என எழுதி மாநகர ஆணையாளர் யாழ்ப்பாணம் என் முகவரியிட்டு பதிவுத்தபால் மூலமோ அல்லது இதற்கென ஆணையாளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியிலோ நேரடியாக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
05. மேலதிக விபரங்களை யாழ். மாநகர சபையின் வேலைப்பகுதியில் அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

| இல. | வேலையின் பெயர் | இக்ராட் பதிவு | மீளளிக்கப்படும் பிணைப்பணம் (VAT, NBT வரி நீங்கலாக) | மீளளிக்கப்படாத பிணைப்பணம் | VAT (12%) | NBT (3%) |
|---|---|---|---|---|---|---|
| 01. | மாநகரசபை முதல்வர் மகாநாட்டு மண்டபத்தில் அலுமினியம் பிரிவிடுதல் (Aluminium partition) மூலம் அறைகள் உருவாக்குதல் | M 08 | 27,000/= | 2,700/= | 324/= | 81/= |

குறிப்பு: வேலைகள் யாவற்றையும் 2009.10.01 திகதிக்கு முன்னர் முடிவுறுத்தப்பட வேண்டும் என கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்

**மு.செ.சரவணபவ**
மாநகர ஆணையாளர்
யாழ்ப்பாணம்.

(C-3287)

# கொழும்பில் மீண்டும் வெள்ளைவான் யாழைச் சேர்ந்த மூவர் கடத்தப்பட்டனர்

(கொழும்பு)

கொழும்பில் மீண்டும் வெள்ளைவான் கடத்தல் சம்பவங்கள் அதிகரிக்க ஆரம்பித்துள்ளன. வத்தளை, புறக்கோட்டை, மொறட்டுவை ஆகியபகுதிகளில் வசித்து வந்த மூவர் வெள்ளை வானில் வந்தவர்களால் கடத்தப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மொரட்டுவை டி.மெல் ஒழுங்கையில் வசித்து வந்த யோகராஜா நிரோஜன் (27) என்பவரை சிலர் இம்மாதம் முதலாந்திகதி அழைத்துச் சென்றதாகவும் இது குறித்து மொரட்டுவை காவல் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவரின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை, புறக்கோட்டை சென்றல் வீதி உப்பிலான் விடுதியில் வெளிநாடு செல்வதற்காக தங்கியிருந்த அச்சுவேலி,தம்பாலையைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை ரவீந்திரன் (33) என்பவர் கடந்த ஓகஸ்ட் 22 ஆம் திகதி மாலை 6.15 மணிக்கு பலவந்தமாக வெள்ளை வானில் ஏற்றிச் செல்லப்பட்டதாக குறித்தநபரின் மனைவி ஆர்.மகாலட்சுமி முறைப்பாடு செய்துள்ளார்.

வத்தளையை வசிப்பிடமாகக் கொண்ட யாழ். நகரைச்சேர்ந்த கிருஸ்ணன் கபில்தேவ் (26) என்பவர் தெமட்டகொடையிலுள்ள சலூன் ஒன்றில் தொழில்புரிந்து வந்த நிலையில் கடந்த ஓகஸ்ட் 18 ஆம் திகதி காணாமல் போயுள்ளதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி காணாமல் போயுள்ள மூன்று நபர்கள் தொடர்பாக பொலிஸ் மா அதிபர் ஜயந்த விக்ரமரட்னவுக்கு அறிவித்துள்ள தாக பிரதியமைச்சர் ராதாகிருஷ்ணன் உறவினர்களிடம் தெரிவித்துள்ளார்.

அதே வேளை கடந்த ஆகஸ்ட் மாதம் 2 ஆம் திகதி அழைத்துச் செல்லப்பட்ட மதிமுகராஜா விஜயவர்மன் (28) என்பவர் நேற்று முன்தினம் அதிகாலை வெள்ளவத்தை விகாரை ஒழுங்கையில் பலத்த காயங்களுடன் கண்கள் கட்டப்பட்ட நிலையில் விடுவிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ந-5)


## நியூ சிற்றி ரேடர்ஸ் (இடமாற்றம்)

கஸ்தூரியார் வீதியில் இயங்கிவந்த மேற்படி ஸ்தாபனம் 319 A,கே.கே.எஸ். வீதிக்கு மாற்றப்பட்டுள்ளது.சொனி- பனசொனிக்-சொனிக்கா-றேடியோ, கசற்றெக்கோடர், சொனி-பைனியர்-ஆட்ரெக் கார் றேடியோ, ஸ்பீக்கர், சொனி-பனசொனிக்-எல்.ஜி கலர் ரீவி (14'',21''), டிஸ் ரீவி, ஈரோகோல்ட் ரிசீவர், இன்டக்ஸ் வூபர்ஸ், பவல்ஸ், வயர், அன்ரனா, பூஸ்ட்டர், கசியோ ஓகன், சுவர் மணிக்கூடுகள், கை மணிக்கூடுகள், காற்பந்து, வொலி போல், கரம்போட், சகல விதமான பற்றிகள், வாட்டர் பில்ரர், பிளாஸ்க், ரோர்ச் மற்றும் அன்பளிப்பு அலங்கார பொருட்களை பெற்றுக் கொள்ளவும் மேற்குறிப்பிட்ட எலக்ரோனிக் பொருட்களை திருத்திக் கொள்ளவும் நாடவேண்டிய ஒரேஸ்தாபனம்

T.P.:- 021 222 3226

**நியூ சிற்றி ரேடர்ஸ்,**
319 A, கே.கே.எஸ். றோட்,
யாழ்ப்பாணம்.

(மேற்படி ஸ்தாபனத்திற்கு யாழ்.நகரில் வேறெங்கும் கிளைகள் இல்லை.மேற்படி ஸ்தாபனம் கே.கே.எஸ்.வீதியில் ஸ்ரான்லி றோட் சந்தியிலிருந்து உட்புறமாக ஐந்தாவது கடை)

(C-3197இ)

## முகாமில் தடுத்துவைக்கப்பட்டு...

கொண்டு இடம்பெயர்ந்த மக்களின் அவல நிலைமைகளை வெளிப்படுத்தினர்.

அரசாங்கம் உரிய முறையில் நிவாரணங்களை வழங்கவில்லை எனவும் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களையும், சர்வதேச தொண்டு நிறுவனப் பணியாளர்களையும் அங்கு செல்ல அரசாங்கம் அனுமதிப்பது இல்லை என்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷங்களை எழுப்பினர்.

குறிப்பாக முகாமில் இருந்து காணாமல் போனதாகக் கூறப்படும் 10 ஆயிரம் பேரின் நிலைமை என்ன என்பது குறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் கேள்வி எழுப்பி பாதுகாப்பு தரப்பினர் மீது குற்றம் சாட்டினர்.

முகாமில் உள்ள மக்களின் அவல நிலைமைகளை வெளிப்படுத்தும் சுலோக அட்டைகள், பாதாகைகள் போன்றவற்றையும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தாங்கியிரு ந்தனர்.

அதே வேளை விலைவாசி உயர்வு மற்றும் தோட்டத் தொழிலாளர்களுக்கு 500 ரூபாய் சம்பள உயர்வு வழங்க மறுக்கின்றமை குறித்தும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷங்கள் எழுப்பினர்.

இந்த ஆர்ப்பாட்டத்தினால் கோட்டை ரயில் நிலைய பகுதியில் வாகன நெரிசல் ஏற்பட்டது. பொலிஸாரும் இராணுவத்தினரும் அங்கு காவல் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

ஆர்ப்பாட்டத்தின் முடிவில் இடது சாரி முன்னணியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன அரசாங்கத்தின் நடவடிக்கைகளை கண்டித்து உரை நிகழ்த் தினார்.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு 13ஆவது திருத்தச் சட்டத்தை அரசாங்கம் உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன தனது உரையில் வேண்டுகோள் விடுத்தார்.

இடம்பெயர்ந்த மக்களின் அவல நிலைமைகளை வெளிப்படுத்தும் வகையில் கொழும்பில் முதன் முதலாக இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

(ந-5).

## 16 ஆயிரத்து 569 பேரின்...

வைக்கப்பட்டுள்ளதாக யாழ். அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார்.

இது தொடர்பில் யாழ். அரச அதிபர் க.கணேஷ் தகவல் தருகையில்;

வன்னி மோதல்களால் இடம்பெயர்ந்து வவுனியா நலன்புரி முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 15 ஆயிரத்து 167 குடும்பங்களைச் சேர்ந்த 44 ஆயிரத்து 920 பேரின் விபரங்கள் சொந்த இடங்களை உறுதிப்படுத்துவதற்காக வவுனியா மாவட்ட செயலகத்தால் கடந்த மாதம் யாழ். மாவட்ட செயலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது.

இதில் இது வரை 5 ஆயிரத்து 558 குடும்பங்களைச் சேர்ந்த 16 ஆயிரத்து 569 பேரின் வதிவிடங்கள் பிரதேச செயலாளர்கள், கிராம சேவையாளர்கள் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டு யாழ். மாவட்ட செயல்கத்தால் பொலிஸ் அனு மதிக்காக யாழ். பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அனுப்பிவைக்கப்பட்டுள்ள 5 ஆயிரத்து 558 குடும்பங்களுக்கும் பொலிஸார் அனுமதி வழங்கியதும் இம் மக்களை சொந்த இடங்களுக்கு மீள்குடியேற்றவதற்கான நடவடிக்கைகள் துரிதகதியில் முன்னெடுக்கப்படும் என யாழ். அரச அதிபர் குறிப்பிட்டார். (ந-5)

## 6 ஆயிரத்து...

838 பேர் இன்று விடுவிக்கப்படுவதாக வவுனியா மாவட்ட செயலகம் அறிவித்துள்ளது.

இதனையடுத்து இம் மக்களை அழைத்து வருவதற்காக யாழ்.மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலக உதவித்திட்டப் பணிப்பாளர் எஸ்.சுதர்சன் மற்றும் மூன்று உத்தியோகத்தர்கள் அடங்கிய குழுவினர் நேற்று வவுனியாவுக்கு சென்றுள்ளனர்.

இக் குழுவினர், முகாம்களில் இருந்து விடுவிக்கப்படும் யாழ்.மாவட்டத்தைச் சோந்த 6 ஆயிரத்து 838 பேரையும் நாளை யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வந்து அந்தந்த பிரதேச செயலாளர்கள் ஊடாக சொந்த இடங்களில் மீள் குடியேற்றம் செய்வர்கள் எனத் தெரிவித்தார். (ந-5)

## அமைச்சர்...

கரவெட்டி, பருத்தித்துறை ஆகிய பிரதேச செயலக விதாத நிலையங்களுக்கும் இவர்கள் விஜயம் செய்யவுள்ளனர்.

மேலும் வெள்ளிக்கிழமை கரவெட்டிப். பிரதேச செயலக விதாத நிலையத்தை அவர் திறந்து வைக்கவுள்ளார்.

(ந-7)

# உண்ணாவிரதம் இருக்கப் போவதாக வெலிக்கடை சிறைக்கைதிகள் அறிவிப்பு

(கொழும்பு)

களுத்துறை, வெலிக்கடை சிறைச் சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் தம்மை விடுதலை செய்யுமாறு கோரி உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

சட்டமா அதிபர் திணைக்கள சட்டத்தரணிகள் மற்றும் மனித உரிமை சட்டத்தரணிகள் வழங்கிய உறுதி மொழிகள் பிரகாரமே ஏற்கனவே நடத்தியிருந்த உண்ணாவிரத போராட்டங்களை தாம் கைவிட்டதாகவும் ஆனாலும் தமது விடுதலைக்கான நடவடிக்கைகள் எதுவும் இதுவரை இடம்பெறவில்லை என்றும் கைதிகள் தெரிவித்துள்ளனர். இந் நிலையில் உண்ணாவிரதம் இருப் பதை தவிரதங்களுக்கு வேறு வழி ஏதும் தெரி ய்வில்லை என்று கைதிகள் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. உண்ணாவிரதம் இருப்பது தொடர்பாக கைதிகள் தமது சட்டத்தர ணிகள் மூலமாக உறவினர்களுக்கும் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர். (ந-5)

## யாழ்ப்பாணத்திற்கு இன்று ஜெய்க்கா நாளை உலக வங்கி வருகைதரும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட அபிவிருத்திப் பணிகளுக்கு நிதியுதவி வழங்குவது தொடர்பில் ஆராய ஜெய்க்கா (JAICA) நிறுவனப் பிரதிநிதிகள் இன்று யாழ்ப்பாணத்திற்கு வருகை தருகின்றனர் என யாழ். அரச அதிபர் க.கணேஷ் தெரி வித்தார்.அத்துடன் உலக வங்கிப் பிரதிநிதிகள் நாளை யாழ்ப்பாணத்திற்கு வருகை தருவதா கவும் அவர் குறிப்பிட்டார்.

வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தில் யாழ். மாவட்டத்தில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித்திட்டங்களுக்கு நிதியுதவி வழங்குவது தொடர்பில் ஆராய் வதற்கேமேற்படி இரு குழுவினரும் யாழ்ப்பாணத்திற்கு வருகை தருவதாகவும் யாழ். அரச அதிபர் கூறினார். (ந-5)

## அவசரகால...

ஆதரவாக தமது கட்சி இதுவரை வாக்களித்து வந்தது எனவும் அவர் தெரிவித்தார்.

தற்போது பயங்கரவாதம் முற்றாகத் தோற்கடிக்கப்பட்டுவிட்டது. எனவே பயங்கரவாதச் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டிய தேவை எதுவும் இப்போது இல்லை.

அதே நேரம் ஊடகங்களை ஒடுக்குவதற்கும் தனது கருத்துக்களுக்கு மாற்றுக் கருத்துடையவர்களுக்கு எதிராகவும் அவசரகாலச் சட்டத்தையும் பயங்கரவாத தடைச் சட்டத்தையும் அரசு பயன்படுத்தி வருகின்றது என்றும் லால் காந்த தெரிவித்தார். (ந-5)

## யாழ்-வவுனியா...

பஸ்கள் மேலதிகமாக வவுனியாவிற்கும் இன்று முதல் நான்கு தினங்கள் சேவையில் ஈடுபடுத்தப்படு மெனவும் அவர் குறிப்பிட்டார்.

தற்போது தினமும் யாழ்ப்பாணத்திற்கும் வவுனியாவிற்கும் இடையில் 15 பஸ்கள் சேவையில் ஈடுபடுவதாகவும் இன்று முதல் 13 ஆம் திகதி வரை 25 பஸ்கள் சேவையில் ஈடுபடு மெனவும் வடபிராந்திய போக்கு வரத்து சபையின் உதவிப் பொது முகாமையாளர் எஸ்.கணேசப்பிள்ளை மேலும் தெரிவித்தார். (ந-5,3)

## வடக்கு மாகாண...

அமைச்சின் செயலாளராகவிருக்கும் ரி.இராசநாயகம் பொது நிர்வாக துணைச் செயலாளராக நியமிக்கப்படவுள்ளனர். (ந-5)

## இலங்கை அரசு கடும்...

இது தொடர்பில் ஐ.நா.பேச்சாளர் தெரிவித் துள்ளதாவது;

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான கருத்தை வெளியிட்டார் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே எல்டர் வெளியேற்றப்பட வேண்டும் என இலங்கை அரசாங்கம் தீர்மானித்திருந்தது.

இந் நிலையில் இந்த விடயம் குறித்து பான் கீ மூன் விரைவில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் தொடர்பு கொள்ளவுள்ளதாக பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

பொதுவான அறிக்கைகளை வெளியிடுவதன் மூலமே பிரச்சினைகளை தவிர்த்துக் கொள்ள முடியும் என்ற அடிப்படையில் ஜேம்ஸ் எல்டரின் விடயத்தில் குறைக்காண முடியாது என்பதே பான் கீ மூனின் கருத்தாகும்.

ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் பாரிய சேவைகளை செய்து வரும் ஒரு நிறுவனம் என்ற அடிப்படையில் அதன் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டியது இலங்கை அரசாங்கத்தின் கடமை என பான் கீ மூன் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கடந்த மே மாதம் தம்முடன் இணங்கிக் கொண்ட விடயங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா? என்பது குறித்தும் பான் கீ மூன் அவதானித்துக் கொண்டிருப்பதாகவும் ஐக்கிய நாடுகளின் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

(ந-5)

புதிய பிரிவு ஆரம்பம் Diploma in Web Development
Special offer
மாறிவரும் உலகில் இணையம் இன்றியமையாதது!
உங்கள் இணையத் தளங்களை நீங்களே வடிவமைக்க முழுமையான பயிற்சி CIW சர்வதேசதர சான்றிதழ்
இலவச இணையத்தள பதிவு
பதிவுகள் 14.09.2009ற்கு முன்
MCS விபரங்களுக்கு நேரில் 324, பலாலி வீதி, பரமேஸ்வராசந்தி அருகில்,
Supported By UNDP/JRRP யாழ்ப்பாணம், Bus Route - 764 Phone: 0772-395 895

துரித பிரதியாக்கல் சேவை
நடமாடும் சேவையை முன்னிட்டு அடையாள அட்டை, பாஸ்போட் படங்களை விரைவாக படம் பிடித்து பெற்றுக் கொள்ள முடியும். 80 /= மட்டுமே
மூர்த்தி டிஜிற்றல் கலர் லாப்,
யாழ்ப்பாணம், நெல்லியடி,
மானிப்பாய், மல்லாகம்.
(C-3282)

வலம்புரியின்
10
ஆவது ஆண்டு நிறைவையொட்டி
மிகவிரைவில்
இணையத் தளத்தில் உங்கள்
வலம்புரி
உலகெங்கும் உள்ள எங்கள் தமிழ் உறவுகள் தங்கள்
தாய்மண்ணின் தகவல்களை உடன் அறிய அரிய வாய்ப்பு
எதிர்பாருங்கள்... மிக விரைவில்

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.09.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.